காம்பௌண்டு ரெஸ்ட் முறை (Compound Rest Method)

நிறை:

1. பணிப்பொருளின் வெளிப்பக்கத்திலும், துளையின் உட்பக்கத்திலும் சரிவு உருளை கடைசல் செய்யலாம்.

குறைகள்:

1. காம்பௌண்டு சிலைடு நகரும் தூரத்திற்கு மட்டுமே சரிவு கடைசல் செய்யலாம். எனவே, அதிக நீளத்திற்கு சரிவு கடைசல் செய்ய முடியாது.
2. கையால் இயக்கி மட்டும் கடைசல் செய்யப்படுகிறது. எனவே நேரம் அதிகமாகும். உற்பத்தி குறையும்.

XII BME_Tamil version CHAPTER 01-2023.indd 29 2/1/2023 1:17:41 PM

1.11.7 மரை வெட்டும் முறை (Thread Cutting Process in Lathe)

மரை வெட்டுதல் (Thread Cutting)

கடைசல் இயந்திரத்தில் மரை வெட்டுதல் என்பது மிக முக்கியமான வேலையாகும். உருளை வடிவ பணிப்பொருளில் சுருள் பள்ளம் வெட்டும் முறைக்கு மரை வெட்டுதல் என்று பெயர்.

இரு மையங்களுக்கு இடையே அல்லது கவ்வியில் பணிப்பொருள் சுழலுகிறது. பணிப்பொருள் ஒரு முழு சுற்று சுற்றுவதற்குள் வெட்டுளியானது தேவையான மரையிடை தூரம் நீளவாட்டத்தில் நகர வேண்டும்.

கடைசல் இயந்திரத்தில் உள்ள வழிநடத்தும் மரையாணியின் சுழலும் விசை பெற்று ஏற்றிச் செல்லும் பகுதி நீளவாட்டத்தில் நகர்த்தப்படுகிறது.

1. சுழற்றியின் வேகத்திற்கும், வழிநடத்தும் மரையாணியின் வேகத்திற்கும் உள்ள வேக விகிதத்தை கணக்கிட்ட வேண்டும்.

கணக்கிடும் முறை

$$\frac{\text{வழி நடத்தும் மரையாணியின் TPI}}{\text{வெட்ட வேண்டிய மரையின் TPI}} = \frac{\text{இயக்கும் பல்லிணை}}{\text{இயக்கப்படும் பல்லிணை}}$$

என்ற சூத்திரத்தை பயன்படுத்தி கணக்கிட்டு,

சுழற்றியின் பின் முனையிலும், வழிநடத்தும் மரையாணியின் இடது முனையிலும் பல்லிணைகளை பொருத்த வேண்டும்.

2. மரையின் வடிவத்திற்கு ஏற்ப வெட்டுளியைத் தேர்ந்தெடுத்து வெட்டுளி கம்பத்தில், பணிப்பொருளுக்கு செங்குத்தாகவும், கடைசல் அச்சின் உயரத்திற்கு சரியாக இருக்கும்படியும் பொருத்த வேண்டும்.
3. வெட்ட வேண்டிய மரையின் வகையைப் பொறுத்து குமிழ் பல்லிணையின் இணைப்பை மாற்றி அமைக்க் வேண்டும்.
4. பின் பக்க பல்லிணை மூலம் சுழற்றிக்குத் தேவையான வேகத்தை அமைக்க வேண்டும்.
5. சேசிங் டயலில் உள்ள அளவுக் கோடுகளை பயன்படுத்தி, அரை வடிவ நட்டின் நெம்புகோலை இயக்கவேண்டும்.
6. தேவையான நீளம் மரை வெட்டியபின் அரை வடிவ நட்டின் நெம்புகோலை தளர்த்தி பின் கேரேஜை பழைய நிலைக்கு கொண்டு வந்து, மரையின் முழு ஆழம் கிடைக்கும் வரை மீண்டும் இயக்கி மரை வெட்டி முடிக்க வேண்டும்.
7. மரை வெட்டிய பின் பொறுத்தமான அளவிகளை (gauges) பயன்படுத்தி மரையின் அளவை சரிபார்க்க வேண்டும்.

எடுத்துக்காட்டு கணக்கு

மரையாணியின் மரையிடை தூரம் 6TPI பணிப்பொருளில் வெட்டத் தேவையான மரை 12TPI எனில், பல்லிணைத் தொடரை கணக்கிடு.

கணக்கிடும் முறை

$$\frac{\text{வழி நடத்தும் மரையாணியின் TPI}}{\text{வெட்ட வேண்டிய மரையின் TPI}} = \frac{\text{இயக்கும் பல்லிணை}}{\text{இயக்கப்படும் பல்லிணை}}$$

$$=6/12 = (6\times 10)/(12\times 10) = 60/120$$

தலைப்பகுதியில் உள்ள சுழற்றியின் முனையில் 60 பற்கள் கொண்ட இயங்கும் பல்லிணையும், மரையாணியின் 120 பற்கள் கொண்ட இயக்கப்படும் பல்லிணையும் இணைக்கப்பட வேண்டும்.

குறிப்பு: மாற்றுப் பல்லிணைகள் 20, 25, 30 மற்றும் 5-தின் மடங்குகளாக 120 பற்கள் வரை பல்லிணைகள் கிடைக்கிறது. அது மட்டுமில்லாமல் 20 அல்லது 25 அல்லது 40 பற்கள் கொண்ட பல்லிணைகள் ஒன்று கூடுதலாகவும் மற்றும் மெட்ரிக் மரை வெட்டுவதற்கு 127 பற்கள் கொண்ட பல்லிணை ஒன்றும் தரப்பட்டு இருக்கும்.

www.tnschoolbooks.in



கடைசல் இயந்திரத்தில் மரை வெட்டும் முறை (காம்பௌண்டு ரெஸ்ட் முறை (Compound Rest Method))

1.12. குளிரப்படுத்தும் திரவம் (Coolant)

உருவமைக்கும் இயந்திரத்தில் உலோகத்தை வெட்டியெடுக்கும் போது உண்டாகும் உராய்வினால் அதிக வெப்பம் ஏற்படும். வெட்டுளி அதன் வெட்டும் தன்மையை இழந்துவிடும். மேலும் இயந்திரப்பணி செய்யப்பட்ட பரப்பு கடினத்தன்மை பெற்றுவிடும். வெட்டுளியின் வெட்டு முனை மற்றும் பணிப்பொருளில் இயந்திரப்பணி செய்யப்பட்ட பரப்பை பாதுகாக்கும் பொருட்டு குளிரப்படுத்தும் திரவம் பயன்படுத்தப்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 01-2023.indd 31 2/1/2023 1:17:41 PM

www.tnschoolbooks.in

சாலுபிள் ஆயில் என்ற எண்ணெய்யை தண்ணீரில் கலக்கினால் பால் போன்ற குளிர்விக்கும் திரவம் கிடைக்கும். ஒரு பங்கு சாலுபிள் எண்ணெய்யை 15 பங்கு தண்ணீருடன் கலக்கி பயன்படுத்த வேண்டும். நேரடியாக தண்ணீரை பயன்படுத்தினால் இயந்திர பாகங்கள் துருப்பிடிக்க நேரிடும். உயவு எண்ணெய்யை குளிரப்படுத்தும் திரவமாக பயன்படுத்தக் கூடாது.

செயல்பாடுகள்

- மாணவர்களை பள்ளிக்கு அருகில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI), பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரி ஆகியவற்றிற்கு அழைத்து சென்று, கடைசல் இயந்திரத்தின் வகைகள், செயல்படும் விதம் பற்றி அறிய செய்தல்.
- மாணவர்களுக்கு கடைசல் இயந்திரத்தில் செய்யப்படும் பல்வேறு வேலைகளை பயிற்சி அளித்தல்.

வினாக்கள்

பகுதி – அ (1 மதிப்பெண்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கடைசல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்
   அ) ஹென்றி மாட்ஸ்லே
   ஆ) எலிவெட்னி
   இ) ஜேம்ஸ் நாஸ்மித்
   ஈ) மைக்கேல் ஃபாரடே
2. சேடில், குறுக்கு நகற்றி, காம்பௌண்ட் ரெஸ்ட், வெட்டுளி கம்பம் ஆகிய பாகங்கள் அடங்கியப் பகுதிக்கு____
   அ) தலைப் பகுதி
   ஆ) வால் பகுதி
   இ) படுக்கை
   ஈ) ஏற்றிச் செல்லும் பகுதி
3. கடைசல் இயந்திரத்தின் படுக்கை இதனால் செய்யப்பட்டது.
   அ) வார்ப்பிரும்பு
   ஆ) அதிக கரி கொண்ட எஃகு
   இ) அதி வேக எஃகு
   ஈ) ஸ்டீலைட்
4. வழி நடத்தும் மரையாணியின் சுழலும் திசையை மாற்றப் பயன்படுவது.
   அ) குமிழ் பல்லிணை
   ஆ) பின் பக்க பல்லிணை
   இ) பல்லிணைப் பெட்டி
   ஈ) அடுக்கு கூம்பு கப்பி
5. சரிவு உருளை செய்ய பயன்படும் பாகம்
   அ) குறுக்கு நழுவி
   ஆ) காம்பௌண்ட் ரெஸ்ட்
   இ) சேடில்
   ஈ) ஏப்ரான்
6. கடைசல் இயந்திரத்தில் வெட்டும் வேகம் காண பயன்படும் சூத்திரம்
   அ) $\frac{\pi DN}{1000}$ மீ/நி   ஆ) $\frac{d_1 - d_2}{2l}$
   இ) $\pi r^2 h$ ஈ) $S = \frac{D - d}{2} \times \frac{L}{l}$
7. பாலிஷிங் லேத் எந்த வகையைச் சார்ந்தது.
   அ) என்ஜின் லேத்
   ஆ) டூல் ரூம்லேத்
   இ) அதிவேக கடைசல் இயந்திரம்
   ஈ) தானியங்கி கடைசல் இயந்திரம்
8. டரட் லேத் மற்றும் கேப்ஸ்டன் லேத் என்பது.
   அ) தானியங்கி கடைசல் இயந்திரம்
   ஆ) பகுதி தானியங்கி கடைசல் இயந்திரம்

XII BME_Tamil version CHAPTER 01-2023.indd 32 2/1/2023 1:17:42 PM

இ) மேடை வகை கடைசல் இயந்திரம்
ஈ) ரூல் ரூம் கடைசல் இயந்திரம்

9. அதிவேக கடைசல் இயந்திரத்தின் வேகம்
அ) சுமார் 600 – 1000 RPM
ஆ) சுமார் 1200 – 3200 RPM
இ) சுமார் 2000 – 2400 RPM
ஈ) சுமார் 3500 – 4000 RPM

10. கடைசல் இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் வெட்டுளி
அ) பல முனை வெட்டுளி
ஆ) ஒரு முனை வெட்டுளி
இ) ரம்பப் பல் கொண்ட வெட்டுளி
ஈ) துண்டு படுத்தும் வெட்டுளி

பகுதி – ஆ (3 மதிப்பெண்)

ஓரிரு வரிகளில் விடையளிக்க

11. கடைசல் இயந்திரம் என்றால் என்ன?
12. கடைசல் என்றால் என்ன?
13. ரூல்ரூம் கடைசல் இயந்திரன் பயன்கள் யாவை?
14. கடைசல் இயந்திரத்தின் சுழல் விட்டம் என்றால் என்ன?
15. V– வடிவ படுக்கையின் சிறப்பியல்புகள் யாவை?
16. பின்பக்க பல்லிணையின் பயன் யாது?
17. கடைசல் இயந்திரத்தில் வழி நடத்தும் மரையாணியின் பயன் யாது?
17. கடைசல் இயந்திரத்தில் வெட்டு வேகம் என்றால் என்ன?
18. காந்த விசை கவ்வியின் பயனை எழுதுக.
19. கடைசல் இயந்திரத்தில் மரையறுக்கும் சூத்திரத்தினை எழுதுக.
20. மரையாணியின் மரையிடை தூரம் 4TPI பணிப்பொருளில் வெட்டத் தேவையான மரை 6TPI எனில், பல்லிணைத் தொடரை கணக்கிடு.

பகுதி – இ (5 மதிப்பெண்)

ஒரு பக்க அளவில் விடையளி.

21. கடைசல் இயந்திரத்தின் வகைகளை வரிசைப்படுத்துக.
22. டரட் லேத்திற்கும், கேப்ஸ்டன் லேத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினைக் கூறுக.
23. கேரேஜில் அடங்கியுள்ள பாகங்கள் யாவை? அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்குக.
24. கடைசல் இயந்திரத்தில் அளவு குறிப்பிடும் முறைகளைக் கூறு.
25. வடிவ வெட்டுளி முறையில் சரிவு உருளை கடைசல் செய்வதை படத்துடன் விளக்குக.

பகுதி – ஈ (10 மதிப்பெண்)

விரிவான விடையளி

26. கடைசல் இயந்திரத்தின் படம் வரைந்து பாகங்களை குறிக்க.
27. அடுக்கு கூம்பு கப்பியின் படம் வரைந்து, செயல்படும் விதத்தினை விளக்குக.
28. கடைசல் இயந்திரத்தில் செய்யப்படும் வேலைகள் ஏதேனும் இரண்டினை நல்ல படத்துடன் விளக்குக.
29. கடைசல் இயந்திரத்தில் பணிப்பொருளைப் பிடிக்கும் முறைகளில் ஏதேனும் இரண்டினை நல்ல படத்துடன் விளக்குக.
30. காம்பௌண்டு ரெஸ்ட் பயன்படுத்தி சரிவு உருளை கடையும் முறையை விளக்குக.

XII BME_Tamil version CHAPTER 01-2023.indd 33 2/1/2023 1:17:42 PM

www.tnschoolbooks.in

பாடம் 2

துளையிடும் இயந்திரம்

WDA96

கற்றலின் நோக்கம்

- துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு, அவற்றின் பாகங்கள் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ளுதல்
- துளையிடும் இயந்திரத்தின் வகைகள் பற்றி அறிந்துகொள்ளுதல்
- தொழிற்சாலைகளில் துளையிடும் இயந்திரத்தின் பல்வேறு வேலைகள் பற்றி புரிந்துகொள்ளுதல்.

பொருளடக்கம்

2.1 அறிமுகம்
2.2 துளையிடும் முறை
2.3 துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு
2.4 துளையிடும் இயந்திரத்தின் வகைகள்
2.5 ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரம்
2.6 துளையிடும் இயந்திரத்தின் அளவு குறிப்பிடும் விதம்
2.7 பணிப்பொருளை பிடிக்கும் முறைகள்
2.8 துளையிடும் இயந்திரத்தில் பயன்படும் பல்வேறு வெட்டுளிகள்
2.9 துளையிடும் இயந்திரத்தில் வெட்டுளிகளை பிடிக்கும் முறைகள்
2.10 துளையிடும் இயந்திரத்தில் செய்யப்படும் வேலைகள்
2.11 வெட்டும் வேகம்
2.12 ஊட்டம்
2.13 வெட்டும் ஆழம்

2.1 அறிமுகம் (Introduction)

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் பல்வேறு இயந்திரங்களில் துளையிடும் இயந்திரம் ஒரு முக்கியமான இயந்திரம் ஆகும். பொறியியல் துறையில் தேவையான உலோகப் பணிப்பொருட்களில் தேவையான விட்டம் மற்றும் ஆழத்திற்கு வட்டமாக துளையிடுவதற்கு வடிவமைக்கப்பட்ட இயந்திரம் துளையிடும் இயந்திரம் ஆகும்.

பொறியியல் துறையில் பல்வேறு இயந்திரங்களில் துளைகள் போடபட்டாலும் துளையிடும் நோக்கத்திற்காகவே தனியாக வடிவமைக்கப்பட்ட இயந்திரம் துளையிடும் இயந்திரம் ஆகும். துளையிடும் இயந்திரத்தை கொண்டு விரைவாகவும், எளிதாகவும், குறைந்த செலவில் துளையிடலாம்.

சுழலும் துளையிடும் அலகினை கொண்டு பணிப்பொருளில் தேவையான விட்டம் மற்றும் ஆழத்திற்கு வட்டமான துளை ஏற்படுத்துவதற்கு "துளையிடுதல்" என்கிறோம்.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 34 2/1/2023 1:19:09 PM

உங்களுக்குத் தெரியுமா?

மின்சாரத்தால் இயங்கும் துளையிடும் இயந்திரத்தை உருவாக்கியவர் ஆர்த்தர் ஜேம்ஸ் அர்னாட் (Arthur James Arnot) மற்றும் வில்லியம் பிளான்ஞ் பிரையன் (William Blanch Brain).

ஆண்டு : 1889.
நாடு: மெல்போர்ன், ஆஸ்திரேலியா.

ஆர்த்தர் ஜேம்ஸ் அர்னாட்

3D துளையிடும் முறை

2.2 துளையிடும் முறை (Method of Drilling)

துளையிடும் இயந்திரத்தில் உள்ள சுழற்றி என்ற பாகத்தில் துளையிடும் அலகு பொருத்தப்பட வேண்டும். பணிப்பொருளில் தேவையான இடத்தில் சென்ட்டர் பஞ்ச் மூலம் ஆழமான புள்ளி குத்த வேண்டும். பணிமேடையில் பணிப்பொருளை சரியான நிலையில் இறுக்கமாக பிடிக்க வேண்டும். புள்ளி குத்திய இடத்தில் சுழலும் துளையிடும் அலகினை படியும்படி வைத்து சுழற்றிக்கு அழுத்தம் கொடுத்தால் அது பணிப்பொருளை துளையிட்டு கொண்டே தேவையான ஆழத்திற்கு புதிய துளையினை ஏற்படுத்தும்.

2.3 துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு (Structure of Drilling Machine)

துளையிடும் இயந்திரத்தின் முக்கிய பாகங்கள் அடிபாகம், தூண் பாகம், தலைபாகம் மற்றும் சுழற்றி ஆகும்.

வார்ப்பிரும்பால் செய்யப்பட்ட அடிப்பாகம் போல்ட் மற்றும் நட் மூலம் தரையின் மீதோ அல்லது மேசையின் மீதோ பொருத்தப்பட்டிருக்கும். பெரிய மற்றும்



3D துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 35 2/1/2023 1:19:10 PM

கனமான துளையிடும் இயந்திரமானது தரையில் பொருத்தப்பட்டிருக்கும். அடிப்பாகத்தின் மேல் செங்குத்தாக தூண் பாகம் அமைக்கப்பட்டிருக்கும். இத்தூண்பாகம் துல்லியமாக இயந்திரப்பணி செய்யப்பட்டு அதில் பணிமேடை மேலும் கீழும் நகரும்படி அமைக்கப்பட்டிருக்கும். தூண் பாகத்தின் மேல் சுழற்றி, தலைப்பகுதி மற்றும் சுழற்றியை இயக்க தேவையான மின்மோட்டார் ஆகியவை பொருத்தப்பட்டிருக்கும்.

மின்மோட்டாரிலிருந்து சுழலும் விசை, சுழற்றிக்கு தட்டை வடிவ பெல்ட் அல்லது V–வடிவ பெல்ட் மூலமாக கடத்தப்படுகிறது. சுழற்றிக்கு ஊட்டம் அளிக்கப்பட்டு பணிப்பொருளில் தேவையான விட்டத்திற்கும் மற்றும் ஆழத்திற்கும் துளை போடப்படுகிறது

2.4 துளையிடும் இயந்திரத்தின் வகைகள் (Types of Drilling Machine)

பொறியியல் துறையில் செய்யப்படும் பல்வேறு வேலைகளை பொறுத்தும், கொடுக்கப்படும் வெட்டும் வேகம், ஊட்டம், ஆழம் ஆகியவற்றை பொறுத்தும், தேவையான துல்லியத்தை பொறுத்தும், துளையிடும் இயந்திரங்கள் பல வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவையாவன.

1. கையிலேந்தி துளையிடும் இயந்திரம் (Portable Drilling Machine (or) Hand Drilling Machine)
2. மேடையில் அமைந்த துளையிடும் இயந்திரம் (அல்லது) நுணுக்கத்துளையிடும் இயந்திரம் (Bench Drilling Machine (or) Sensitive Drilling Machine)
3. நிமிர்ந்த தூண் வகை துளையிடும் இயந்திரம் (Upright Drilling Machine)
   அ) முகப்பு தூண் வகை (Box column)
   ஆ) உருளை வடிவ அமைப்பு கொண்ட தூண் வகை (Round column)
4. ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரம் (Radial Drilling Machine)
5. கூட்டுத் துளையிடும் இயந்திரம் (Gang Drilling Machine)
6. பல சுழற்றித் துளையிடும் இயந்திரம் (Multi – Spindle Drilling Machine)
7. அதிக ஆழம் துளையிடும் இயந்திரம் (Deep Hole Drilling Machine)
   அ) கிடைமட்ட சுழற்றி வகை
   ஆ) செங்குத்து சுழற்றி வகை
8. தானியங்கி துளையிடும் இயந்திரம் (Automatic Drilling Machine)

2.4.1 கையிலேந்தி துளையிடும் இயந்திரம் (Portable or Hand Drilling Machine)

கையிலேந்தி துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது.

கையிலேந்தி துளையிடும் இயந்திரம்

பணிமேடையில் பொருத்தி துளையிட முடியாத மிகப்பெரிய பணிப்பொருட்களில் தேவையான இடங்களில் துளையிடப் பயன்படும் மிகச்சிறிய இயந்திரத்திற்கு கையிலேந்தி துளையிடும் இயந்திரம் என்று பெயர். இது அளவில் சிறியது. இதில் துளையிடும் இயந்திர நுட்பம் முழுவதும் அளவில் சிறியதாகவும், எளிதாகவும்

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 36 2/1/2023 1:19:10 PM

www.tnschoolbooks.in

உள்ளதால் தேவையான இடங்களுக்கு கையில் எடுத்துச் சென்று துளையிட பயன்படுகிறது.

இவ்வகையான துளையிடும் இயந்திரம் கனரக வாகனம், கார், பேருந்து போன்றவற்றின் கட்டுமான பணிகளுக்கு பயன்படுகிறது. இவ்வகையான இயந்திரங்கள் கையினால் அல்லது தனி மின்மோட்டார் மூலம் இயக்கப்படுகிறது.

கையிலேந்தி துளையிடும் இயந்திரத்தை கொண்டு 12 மிமீ முதல் 18 மிமீ வரை விட்டமுடைய துளைகளை ஏற்படுத்தலாம். சிறிய அளவுள்ள துளையிடும் அலகினை பயன்படுத்தி துளையிடும்போது சுழற்றி வேகமாக சுழலும். இதில் ஊட்டம் கையினால் அழுத்தி தரப்படுகிறது.

2.4.2 மேடையில் அமைந்த துளையிடும் இயந்திரம் (அல்லது) நுணுக்கத் துளையிடும் இயந்திரம் (Bench Drilling Machine)

நுனுக்கமான துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது.

இயந்திரத்தின் அடிப்பாகம் பெஞ்ச் மீதோ அல்லது தரையின் மீதோ போல்ட் மற்றும் நட் மூலம் பொருத்தப்பட்டிருக்கும். பணி பொருளில் 1.5 மிமீ முதல், 15.5 மிமீ வரை விட்டமுள்ள துளைகள் துளையிட பயன்படுகிறது. பணிப்பொருளில் துளையிட சுழற்றிக்கு கையினால் மட்டுமே ஊட்டம் தரப்படுகிறது. இதனை இயக்குபவர் துளையிடுவதை தன் கையினால் உணர முடிவதால் இதனை நுணுக்க துளையிடும் இயந்திரம் என்று அழைக்கிறோம்.

அதிவேக நுணுக்க துளையிடும் இயந்திரமானது மிகச்சிறிய 0.35 மி.மீ. விட்டமுள்ள துளைகளை ஏற்படுத்த பயன்படுகிறது. இதில் சுழற்றி நிமிடத்திற்கு 2000 சுற்றுக்கள் மற்றும் அதற்கு மேலும் சுழலும் தன்மையை பெற்றிருக்கும்.

இதன் முக்கிய பாகங்கள் அடிப்பாகம், தூண்பாகம், பணிமேடை, சுழற்றி, தலைபாகம் மற்றும் சுழற்றியை இயக்கும் இயந்திர நுட்பம் ஆகிய பாகங்களை கொண்டுள்ளது.

அடிப்பாகம் (Base)

இது வார்ப்பிரும்பால் செய்யப்பட்டிருக்கும் அதிர்வை தாங்கும் குணமும் அதனை கடத்தா குணமும் உண்டு. இது மேடையின் மீதோ அல்லது தரையின் மீதோ பொருத்துவதற்காக துளைகள் போடப்பட்டிருக்கும். இது எல்லா பாகங்களையும் தாங்கிக் கொண்டுள்ளது.

தூண்பாகம் (Column)

தூண்பாகம் உருளை வடிவமாகவோ அல்லது சதுர (அ) செவ்வக அமைப்பைக் கொண்டது ஆகும். அடிப்பாகத்தின் மேல் செங்குத்தாக பொருத்தப்பட்டிருக்கும். இது பணிமேடை, சுழற்றியின் தலைபாகம் மற்றும் மின் மோட்டார் ஆகியவற்றைத் தாங்கி நிற்கிறது.

பணிமேடை (Work Table)

பணிமேடை தூண்பாகத்தில் இணைக்கப்பட்டு கையினால் மேலும் கீழும் ஏற்றி இறக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. இதில் T–வடிவ பள்ளங்கள் வெட்டப்பட்டிருக்கும். பணிப்பொருளை தாங்கி பிடிக்கப் பயன்படுகிறது. இதை தூணின் வழியே நகற்றி பணிப்பொருளுக்கு ஏற்றவாறு தேவையான இடத்தில் நிலையாக அமைத்துக் கொள்ளலாம்.

சுழற்றியின் தலைப்பாகம் (Spindle Head)

இது தூண்பாகத்தின் மேல் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பக்கத்தில் மின்மோட்டாரும், மற்றொரு பக்கத்தில் சுழற்றிக்கு ஊட்டம் தரும் இயந்திர நுட்பமும் இருக்கும். மின்மோட்டாரில் இருந்து சுழற்றிக்கு சுழலும் விசை அடுக்கு கூம்பு கப்பி மூலம் தரப்படுகிறது. தட்டைப் பல்லிணை மற்றும் சிறு பல்லிணை அமைப்பு மூலம் சுழற்றிக்கு கையினால் ஊட்டம் தரப்பட்டு, துளை போடப்படுகிறது. சுழற்றி நிமிடத்திற்கு 50 முதல் 2000 சுற்றுக்கள் வரை சுற்றும்.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 37 2/1/2023 1:19:10 PM



மேடையில் அமைந்த துளையிடும் இயந்திரம் (அல்லது)
நுணுக்கத் துளையிடும் இயந்திரம் (Bench Drilling Machine)

2.5 ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரம் (Radial Drilling Machine)

ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரம் நடுத்தர மற்றும் பெரிய கனமான பணிப்பொருட்களில் துளை மற்றும் மறைகளை ஏற்படுத்துவதற்கு ஏற்ற இயந்திரமாகும். இது பெரிய கனரக தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. இதில் 50 மிமீ–க்கு மேல் விட்டமுள்ள துளைகளை போடலாம்.

ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் முக்கிய பாகங்கள் அடிப்பாகம், தூண்பாகம், ஆரக்கை, சுழற்றி தலைப்பாகம், சுழற்றிக்கு வேகம் மற்றும் ஊட்டம் தரும் இயந்திர நுட்பம் போன்றவை ஆகும்.

உங்களுக்குத் தெரியுமா?

ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரத்தை உருவாக்கியவர் ஜிப்ரே ரிவிஸ் (Geoffry Reeves). நாடு : ஆஸ்திரேலியா, ஆண்டு : 1890

அடிப்பாகம் (Base)

இது நீண்ட செவ்வக மற்றும் அகலமான அமைப்பு உடைய வார்பிரும்பினால் செய்யப்பட்ட பாகமாகும். தரையில் பொருத்துவதற்கான துளைகள் போடப்பட்டிருக்கும் மேற்பரப்பு துல்லியமாக பொறிப்பணி செய்யப்பட்டு பணிமேடை மற்றும் பணிப்பொருளை பிடிக்க ஏதுவாக T–வடிவ பள்ளங்கள் வெட்டப்பட்டிருக்கும்.

தூண்பாகம் (Column)

தூண்பாகம் அடிப்பாகத்தின் மீது செங்குத்தாக பொருத்தப்பட்ட, உருளை வடிவ பெரிய பாகமாகும். இதில் ஆரக்கை (Radial Arm) என்ற பாகம் மேலும் கீழும் ஏறி, இறங்கும் வகையில் பொருத்தப்பட்டிருக்கும். இது வழி நடத்தும் மறையாணியுடன் இணைக்கப்பட்டு, ஆரக்கையை செங்குத்து திசையில், பணிப்பொருளின் அளவிற்கு ஏற்ப மேலும் கீழும் நகரச் செய்ய பயன்படுகிறது.

ஆரக்கை (Radial Arm)

ஆரக்கை தூண்பாகத்தில் மேலும், கீழும் ஏற்றி, இறக்கும் வகையில்

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 38 2/1/2023 1:19:11 PM



ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரம் (Radial Drilling Machine)

அமைக்கப்பட்டிருக்கும். இது அடிப்பாகத்திற்கு இணையாக அமைந்திருக்கும். ஆரக்கையில் வழித்தடம் அமைக்கப்பட்டு அதில் சுழற்றியின் தலைப்பகுதி முன்னும், பின்னும் கிடைமட்டத்தில் நகரும்படி அமைக்கப்பட்டிருக்கும்.

சுழற்றியின் தலைப்பாகம் (Spindle Head)

சுழற்றியானது, ஆரக்கை என்னும் நீண்ட சட்டத்தில் பொருத்தப்பட்டிருக்கும். சுழற்றியின் தலைப்பகுதியில் தனி மின்மோட்டார் பொருத்தப்பட்டிருக்கும். அதிலிருந்து சுழற்றிக்கு சுழலும் விசை தரப்படுகிறது. சுழற்றிக்கு தேவையான பல்வேறு வேகங்கள், ஊட்டம் மற்றும் தானியங்கி ஊட்ட நுட்பம் ஆகிய அனைத்தும் தலைபாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

2.5.1 சிறப்பு அம்சங்கள் (Special Advantages)

(i) ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரத்தை கொண்டு பணிப்பொருளை நகற்றாமல் பணிப்பொருளின் மீது வெவ்வேறு இடங்களில் துளையிடலாம்.

(ii) சுழற்றியின் தலைபாகத்தை குறிப்பிட்ட கோணத்தில் மாற்றியமைத்து சாய்வுத் துளையிடலாம்.

(iii) சுழற்றியில் மரையறுக்கும் உபகரணத்தை பொருத்தி துளையின் உட்பகுதியில் மரையிடலாம்.

2.6 துளையிடும் இயந்திரத்தின் அளவு குறிப்பிடும் விதம் (Size of Drilling Machine)

துளையிடும் இயந்திரத்தின் வகையைப் பொறுத்து அதன் அளவை குறிப்பிட வேண்டும்.

(i) கையிலேந்தித் துளையிடும் இயந்திரமாக இருப்பின் அதை பயன்படுத்தி போடப்படும் மிகப்பெரிய

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 39 2/1/2023 1:19:11 PM

துளையின் விட்டத்தின் அளவை கொண்டு குறிப்பிடவேண்டும்.

(ii) நுணுக்க மற்றும் நிமிர்ந்த தூண் வகை துளையிடும் இயந்திரமாக இருப்பின் அதன் பணிமேடை மீது பொருத்தி துளையிடப்பட வேண்டிய மிகப்பெரிய விட்டமுடைய பணிப்பொருளின் அளவை கொண்டு குறிப்பிட வேண்டும். அந்த அளவானது தூணின் முகப்பிற்கும், சுழற்றியின் மையத்திற்கும் இடையே உள்ள தூரத்தின் அளவைவிட சுமார் இரண்டு மடங்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

(iii) ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரத்தை குறிப்பிடும் போது தூண்பாகத்தின் விட்டம், ஆரக்கையின் நீளம், சுழற்றியின் வேகங்களின் எண்ணிக்கை மற்றும் ஊட்டம் பற்றி குறிப்பிட வேண்டும்.

(iv) ஒரு துளையிடும் இயந்திரத்தினைப் பற்றி முழுமையாக குறிப்பிடும்போது அத்துளையிடும் இயந்திரத்தின் மூலம் துளையிடக் கூடிய மிகப்பெரிய துளையின் அளவையும், சுழற்றி நகரக்கூடிய அதிகபட்ச தூரத்தையும், பணிப்பொருளின் விட்டத்தையும், சுழற்றி இயங்கும் முறையையும், சுழற்றிக்கு தரப்படும் பல்வேறு வேகங்கள், ஊட்டங்கள் ஆகியவற்றை கொண்டு அளவு குறிப்பிடப்படுகிறது.

(v) சுழற்றியில் உள்ள மோர்ஸ் சரிவு, தேவைப்படும் மின்மோட்டாரின் குதிரைசக்தி திறன், இயந்திரத்தின் மொத்த எடை, தேவைப்படும் இடம் போன்ற குறிப்புகள் தர வேண்டும்.

2.7 பணிப்பொருளைப் பிடிக்கும் முறைகள் (Work – Holding Devices)

நோக்கம்: துளையிடும் இயந்திரத்தில் எந்தவொரு இயந்திர வேலை செய்வதாக இருந்தாலும் பணிப்பொருளை சரியான நிலையில் பணிமேடையின் மீது இறுக்கமாக பிடிக்க வேண்டும். பணிப்பொருளை கையில் பிடித்து வேலை செய்யக் கூடாது. ஏனெனில் சுழற்றியின் சுழலும் விசைக் காரணமாக பணிப்பொருள் கழன்று வெட்டுளிக்கும், இயந்திர பணியாளருக்கும் ஆபத்தையும், சேதத்தையும் ஏற்படுத்தும்.

பணிப்பொருட்களை பிடிக்க கீழ்க்கண்ட பிடிப்புச் சாதனங்கள் பயன்படுகின்றன.

1. வைஸ்.
2. T–வடிவ போல்ட், நட் மற்றும் பிடிப்பு பட்டைகள்.
3. ஸ்டெப் பிளாக்.
4. V–பிளாக்.
5. ஆங்கிள் பிளேட்.
6. ட்ரில்ஜிக்– போன்றவையாகும்.

1. வைஸ் (Vise)

துளையிடும் இயந்திரத்தில் பணிப்பொருட்களை இறுக்கி பிடிக்கப் பயன்படும் முக்கிய சாதனங்களில் இதுவும் ஒன்று. இதில் நிலையான தாடை மற்றும் நகரும் தாடை இரண்டிற்கும் இடையே பணிப்பொருளை வைத்து இறுக்கிப் பிடிக்கப்படுகிறது. பணிப்பொருளை உயர்த்தியும், சமமாகவும் அமைக்க இணைத் துண்டுகள் (Parallel Blocks) பயன்படுத்தப்படுகிறது. இதனால் துளையிடும்




சாதாரண வைஸ் (Plain Vise)

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 40 2/1/2023 1:19:11 PM

www.tnschoolbooks.in

பொழுது, துளையிடும் அலகு, வைஸின் மேற்பரப்பை பாதிக்காதபடி தடுக்கலாம்.

கீழ்க்கண்ட பல்வேறு வைஸ்கள் துளையிடும் இயந்திரத்தில் பயன்படுத்தப்படுகிறது.

a) சாதாரண வைஸ் (Plain Vise)
b) சுழலும் வைஸ் (Swivel Vise)
c) சாய்வு வைஸ் (Tilting Vise)
d) அனைத்திற்கும் ஏற்ற வைஸ் (Universal Vise)



அனைத்திற்கும் ஏற்ற வைஸ் (Universal Vise)

T–வடிவ போல்ட் மற்றும் பிடிப்பு பட்டை (T–bolt and clamp)

T– வடிவ போல்ட், பிடிப்பு பட்டைகள் மற்றும் ஸ்டெப் பிளாக்களை கொண்டு துளையிடும் இயந்திரத்தின் பணிமேடையில் நேரடியாக பணிப்பொருளை பிடிக்கலாம். பணிமேடையில் T–வடிவ பள்ளம் வெட்டப்பட்டு இருக்கும். அவற்றில் T–போல்ட் பொருந்தும். 15 மிமீ முதல் 20 மிமீ விட்டமுடைய போல்ட்கள் பயன்படுத்தப்படுகின்றன. மென்மையான எஃகு உலோகத்தால் ஆன பிடிப்பு பட்டைகள் பயன்படுத்தப்படுகிறது. இதன் ஒருமுனை பணிப்பொருளை இறுக்கி பிடிக்கவும் மற்றொரு முனை அடுக்குப்படித் துண்டிலும் பொருத்தப்படுகிறது.



T–வடிவ போல்ட் மற்றும் பிடிப்பு பட்டை
(T–bolt and clamp)

பிடிப்பு பட்டைகளின் வகைகள்

a) சாதாரணத் துளை கொண்ட பிடிப்புப் பட்டை
b) வாத்துக் கழுத்து கொண்ட பிடிப்புப் பட்டை
c) விரல் வடிவம் கொண்ட பிடிப்புப் பட்டை.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 41 2/1/2023 1:19:11 PM



XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 42 2/1/2023 1:19:11 PM

ஸ்டெப் பிளாக் (Step–block)

இது நீண்ட படிக்கட்டு வடிவ அமைப்புடையது. இது பணிப்பொருளை இறுக்கிப்பிடிக்கப் பயன்படுகிறது. T–போல்ட் மற்றும் பிடிப்புப் பட்டை பயன்படுத்தும் பொழுது பணிப்பொருளின் உயரத்திற்கு ஏற்றபடி, ஏதேனும் ஒரு படியில் பிடிப்பு பட்டையின் ஒருமுனை படியும்படி அமைக்கலாம்

V–பிளாக் (V–block)

இது உருளை வடிவமான பணிப்பொருட்களை இறுக்கிப் பிடிக்க பயன்படுகிறது. பணிப்பொருட்களின் நீளத்தைப் பொறுத்து இரண்டு (அல்லது) மூன்று V–வடிவ பிளாக்குகளை பயன்படுத்தலாம். இதன் மேல் பக்கத்தில் உள்ள V–வடிவப் பள்ளத்தில் பணிப்பொருள் பொருத்தப்பட வேண்டும். பக்கவாட்டில் உள்ள சதுர வடிவ பள்ளத்தில் பிடிப்புப் பட்டையை அமைத்து, போல்ட் மூலம் பணிப்பொருள் அசையாமல் பிடிக்கப்படுகிறது.



V–பிளாக் (V–block)

V–பிளாக்கானது வார்ப்பிரும்பு (அல்லது) எஃகு உலோகத்தில் தயாரிக்கப்பட்டு துல்லியமாக இயந்திரப்பணி செய்யப்பட்டிருக்கும்.

ஆங்கிள் பிளேட் (Angle – plate)

இது ஒன்றுக்கொன்று செங்குத்தாக உடைய இரண்டு முகப்புகளை கொண்ட 'ட' வடிவச் சட்டம் போன்றதாகும். எல்லா பக்கங்களும் துல்லியமாக இயந்திரப்பணி செய்யப்பட்டிருக்கும். முகப்புப் பகுதி மற்றும் நீளவாட்டத்தில் துளைகள் மற்றும் பள்ளங்கள் போடப்பட்டிருக்கும். இதில் போல்ட் மற்றும் நட்டினை பொருத்தி பணிமேடையின் மீது அமைத்து பணிப்பொருட்களை பிடிக்கலாம்.



ஆங்கிள் பிளேட் (Angle – plate)

டிரில் ஜிக் (Drill Jig)



டிரில் ஜிக் (Drill Jig)

ஒரே மாதிரியான அதிக எண்ணிக்கையுடைய பணிப்பொருட்களில் துளையிடும் போது, பணிப்பொருட்களை சரியாகப் பிடித்து துளையிடும் அலகை வழி நடத்துவதற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட சிறப்பு சாதனம் ட்ரில்ஜிக் ஆகும். பணிப்பொருட்களை விரைவாக பிடிக்கவும், வெளியேற்றவும், வெட்டுளியை வழி நடத்தவும் பயன்படுகிறது.

ஒரே அளவுள்ள துளைகளை துல்லியமாக ஏற்படுத்த பயன்படுகிறது. டிரில் ஜிக் பயன்படுத்த அதிக செயல்திறமை தேவையில்லை.

ஜிக்கின் வகைகள்

a) பிளேட் ஜிக் (plate jig)
b) சேனல் ஜிக் (Channel jig)
c) பாக்ஸ் ஜிக் (Box jig)
d) டையாமீட்டர் ஜிக் (Diameter jig)
e) இண்டக்சிங் ஜிக் (Indexing jig).
f) டெம்பிளேட் ஜிக் (Template jig)

2.8 துளையிடும் இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு வெட்டுளிகள் (Tools used in Drilling Machine)

துளையிடும் இயந்திரத்தில் செய்யப்படும் பல்வேறு விதமான வேலைகளுக்காக பலவகை வெட்டுளிகள் பயன்படுத்தப்படுகிறது.

அவையாவன,

1. துளையிடும் அலகு (Drill Bit)
2. துளை சுரண்டி (Reamer)
3. மாற்று துளை பெருக்கி (Counter bore)
4. துளைமுனை பெருக்கி (Counter sink)
5. டாப் (Tap)

துளையிடும் அலகு (Drill Bit)

இது உலோகப் பணிப்பொருட்களில் துளையை ஏற்படுத்தும் வெட்டுளியாகும். துளையிடும் அலகில் ஃபுளூட் எனப்படும் சுருள் வடிவ பள்ளம் வெட்டப்பட்டிருக்கும்.



துளையிடும் அலகு (Drill Bit)

துளையிடும் அலகின் வகைகள்

துளையிடும் அலகுகள், அதிவேக எஃகு (High Speed Steel) அல்லது அதிக கரிகொண்ட எஃகு (High Carbon steel) ஆகியவற்றினால் தயாரிக்கப்படுகிறது.

இதில்

1. நேரான காம்பு கொண்ட வகை
2. சரிவு காம்பு கொண்ட வகை உள்ளது.

நேரான காம்பு கொண்ட துளையிடும் அலகு 2 மிமீ முதல் 16 மிமீ விட்டம் வரை இருக்கும் 16 மிமீ–க்கு மேல் அளவுள்ள துளையிடும் அலகில் சரிவு காம்பு இருக்கும்.

துளை சுரண்டி (Reamer)

துளை சுரண்டி என்பது ஏற்கெனவே போடப்பட்ட துளையின் உட்பரப்பை சரி செய்யப் பயன்படும் பல முனைகள் கொண்ட வெட்டுளி (Multi–Point–Tool) ஆகும். இது சிறிதளவு உலோகத்தை மட்டும் நீக்கும். துளையின் உட்பரப்பில் பளபளப்பான தோற்றத்தை ஏற்படுத்தும்.

துளை சுரண்டி (Reamer)

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 44 2/1/2023 1:19:12 PM

மாற்றுத் துளை பெருக்கி (Counter bore)

மாற்றுத் துளை பெருக்கி என்பது ஏற்கெனவே போடப்பட்ட துளையில் குறிப்பிட்ட ஆழத்திற்கு மட்டும் சற்று பெரிதாக்கப் பயன்படும், பலமுனை கொண்ட வெட்டுளி ஆகும். இதில் மூன்று அல்லது நான்கு வெட்டு முனைகள் இருக்கும். மாற்றுத் துளை பெருக்கி நேரான பள்ளம் அல்லது சுருள் பள்ளம் கொண்ட வெட்டு முனைகளாக இருக்கும்.

மாற்றுத் துளை பெருக்கி (Counter bore)

மிருதுவான பணிபொருட்களாகிய பித்தளை மற்றும் அலுமினியம் ஆகியவற்றில் குறைந்த ஆழத்திற்கு, மாற்றுத் துளை பெருக்குதல் செய்ய நேரான பள்ளம் கொண்ட வெட்டுளியும் அதிக ஆழத்திற்கு மாற்றுத் துளை பெருக்குதல் செய்ய, சுருள் பள்ளம் கொண்ட வெட்டுளியும் பயன்படுத்தப்படுகிறது.

துளை முனை பெருக்கி (Counter sink)

கவுண்டர் சிங்க் என்பது கூம்பு வடிவ முகப்புடைய பலமுனை கொண்ட வெட்டுளி ஆகும். வெட்டு முனையின் கோணத்தை தவிர இதன் அமைப்பானது மாற்று துளை பெருக்கி போன்றே இருக்கும். இதன் கோணம் 60°, 82° அல்லது 90° கொண்டதாக இருக்கும். துளையின் மேற்பரப்பில் கூம்பு வடிவத்தை ஏற்படுத்தப் பயன்படுகிறது.



துளை முனை பெருக்கி (Counter sink)

திருகுத் துளையிடும் அலகினை உருவாக்கியவர் ஸ்டீவன் ஏ. மார்ஷ் (Steven A. Morse), நாடு – இங்கிலாந்து ஆண்டு – 1861.



XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 45 2/1/2023 1:19:12 PM

உள் மரையிடும் வெட்டுளி (Tap)

உள் மரையிடும் வெட்டுளி, தோற்றத்தில் மரையாணி போல் காணப்படும். இதில் மூன்று அல்லது நான்கு பள்ளங்கள் மரைக்கு குறுக்கே வெட்டப்பட்டது போல் இருக்கும். இது உட்பக்க மரையிடப் பயன்படுகிறது. இது பல முனை வெட்டுளியாகும். துளையின் உட்பரப்பில் எளிதாக படிவதற்கு அடிமுனையில் சரிவுப்பகுதியும், மேற்பக்கத்தில் காம்பு பாகமும் உள்ளது.

டாப் வெட்டுளியானது கார்பன் எஃகு அல்லது அதிவேக எஃகினால் செய்யப்பட்டிருக்கும்.

இரண்டு வகை உள் மரையிடும் வெட்டுளிகள் பயன்படுகின்றன அவை (i) கையினால் பயன்படுத்தப்படும் உள் மரையிடும் வெட்டுளி (Hand Tap), (ii) இயந்திர உள் மரையிடும் வெட்டுளி (Machine tap) ஆகும்.



டாப் (Tap)

2.8.1 திருகு துளையிடும் அலகின் பல்வேறு பாகங்கள் (Twist Drill And its parts)

திருகு துளையிடும் அலகின் அமைப்பு மற்றும் பாகங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

உடல் பகுதி (Body)

இது துளையிடும் அலகின் கழுத்துப் பகுதியிலிருந்து வெட்டுளியின் முனை வரை உள்ள பாகமாகும். கழுத்துப் பகுதி இல்லையெனில் காம்பு பாகத்தின் ஆரம்பத்திலிருந்து உடல் பாகம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இதில் சுருள் வடிவ பள்ளம் வெட்டப்பட்டிருக்கும்.

காம்பு (Shank)

உடல் பாகத்திற்கு மேலே அமைந்த பாகம் காம்பு (Shank) எனப்படும். இதில் சரிவுக்காம்பு மற்றும் சரிவற்றக் காம்பு என்று இருவகைகள் உள்ளன. இப்பாகம் சுழற்றியில் நேரடியாகவோ அல்லது பிடிப்பு உபகரணங்கள் மூலமாகவோ பிடிக்கலாம்.

காம்பு முனை (Tang)

இது சரிவுக் காம்பு கொண்ட துளையிடும் அலகின் மேல் பகுதியில் உள்ள தட்டையானப் பகுதியாகும். சுழற்றியின் உட்பகுதியில் உள்ள நீளவாட்டத்துளையில் பொருந்தும். சுழற்றியின் சுழலும் விசை துளையிடும் அலகிற்கு காம்பு முனை மூலமாகக் கடத்தப்படுகிறது.

கழுத்துப் பகுதி (Neck)

துளையிடும் அலகின் உடல் பகுதிக்கும், காம்புப் பகுதிக்கும் இடையே வெட்டப்பட்டுள்ள அடிவார பள்ளத்தை இது குறிக்கும். துளையிடும் அலகின் அளவானது இதில் குறிக்கப்பட்டிருக்கும்.

லேண்ட் (Land)

இரு அடுத்துதடுத்து உள்ள சுருள்வடிவ பள்ளத்திற்கு வெளியே உள்ள உடல்பாகத்தின் பகுதி ஆகும். இது துளையினுள் படிந்து துளையிடும் அலகிற்கு வழிகாட்டியாக அமைகிறது. ஆகையால் துளை நேராகவும், சரியான அளவுக்கும் கிடைக்கிறது.

ஃபுளூட் (Flute)

துளையிடும் அலகின் உடல் பகுதியில் அமைந்துள்ள சுருள் வடிவ பள்ளமாகும்.

- துளையிடும் அலகில் வெட்டு முனையை ஏற்படுத்தி தருவதற்கும்,

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 46 2/1/2023 1:19:12 PM

www.tnschoolbooks.in



துளையிடும் அலகின் பல்வேறு பாகங்கள்

- துளையிடும் பொழுது ஏற்படுகின்ற பிசிறுகளை வெளியேற்றுவதற்கும்,
- துளையிடும்போது பிசிறுகளை சுருள் வடிவமாக மாற்றுவதற்கும்
- குளிரப்படுத்தும் திரவம் வெட்டும் முனைகள் வரை சென்றடைவதற்கும் பயன்படுகிறது.

2.9 துளையிடும் இயந்திரத்தில் வெட்டுளிகளைப் பிடிக்கும் முறைகள் (Tool – Holding Devices)

துளையிடும் இயந்திரங்களில் செய்யப்படுகின்ற வேலைகளுக்குக்கேற்ப பல்வேறு வெட்டுளிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை சுழற்றியில் பிடிக்க பலவிதமான பிடிப்புச் சாதனங்கள் உள்ளன.

அவையாவன,

1. சுழற்றியில் நேரடியாகப் பொருத்துதல்
2. சிலீவ் (Sleeve) மூலம் பொருத்துதல்
3. சாக்கெட் (Socket) மூலம் பொருத்துதல்
4. டிரில் கவ்வி (Drill chuck) மூலம் பொருத்துதல்
5. சிறப்பு சேர்க்கை உபகரணம்.
   அ) மரையறுக்கும் உபகரணம் (Tapping attachement)
   ஆ) புளோட்டிங் பிடிப்பான் (Floating Holder)

www.tnschoolbooks.in



சுழற்றியில் நேரடியாக பொருத்துதல் (Directly fit into the spindle)

துளையிடும் அலகினை சுழற்றியில் நேரடியாக பொருத்தும் முறை பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

சரிவு காம்பு கொண்ட துளையிடும் அலகினை நேரடியாக பிடிக்கலாம்.

துளையிடும் அலகை பொருத்தும் பொழுது உராய்வினால் சுழற்றியில் உள்ள மோர்ஸ் சரிவில் இறுக்கமாக பொருந்துகிறது. சுழற்றியில் உள்ள சரிவுத்துளையின் மேல்முனையில் உள்ள நீள்வட்டத்துளையில் துளையிடும் அலகின் காம்பு முனை (Tang) பொருந்துவதால் துளையிடும் அலகிற்கு சுழலும் விசை தடைப்படாமல் கிடைக்கிறது.

துளையிட்டபிறகு சுழற்றியிலிருந்து துளையிடும் அலகினை வெளியேற்ற சரிவுச் ஆப்பு (Drift) பயன்படுகிறது. இதனை சுழற்றியில் உள்ள நீள்வட்டத்துளையில் செலுத்தி லேசாக தட்டினால் துளையிடும் அலகு வெளியேறும். சரிவுச் ஆப்பு (Drift key) கடின எஃகினால் செய்யப்பட்டிருக்கும்.



சுழற்றியில் நேரடியாக பொருத்துதல்

உறை (Sleeve)

உறையின் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. சுழற்றியில் உள்ள சரிவுத்துளையைக் காட்டிலும் சிறிய அளவுள்ள சரிவுக் காம்பு கொண்ட துளையிடும் அலகினைப் பொருத்த உறை பயன்படுத்தப்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 48 2/1/2023 1:19:13 PM



உறை (Sleeve)



சாக்கெட் (Socket)

உறையின் வெளிப்பாகம் சரிவாக இருப்பதால் சுழற்றியின் துவாரத்தில் பொருந்தும். உறையின் உட்புறத்தில் துளையிடும் அலகின் சரிவுக்காம்பு பொருந்தும். சுழற்றியின் துளையில் உள்ள உறையினுள் காம்பு முனைப்பகுதி பொருந்தி சுழலும். வெவ்வேறு சரிவு கொண்ட உறைகள் வெவ்வேறு அளவுள்ள துளையிடும் அலகினை பிடிக்கப்பயன்படுகிறது.

துளையிடும் அலகினை சுழற்றியிலிருந்து வெளியேற்ற முதலில் உறையை சரிவு ஆப்பு கொண்டு வெளியேற்ற வேண்டும். அப்போது உறையும், துளையிடும் அலகும் சேர்ந்து வெளியேறும். பிறகு உறையிலிருந்து துளையிடும் அலகை வெளியேற்ற வேண்டும்.

சாக்கெட் (Socket)

சாக்கெட் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. சுழற்றியின் சரிவுத்துளையைவிட, துளையிடும் அலகின் சரிவுத்துளை பெரியதாக இருப்பின் சாக்கெட் மூலம் துளையிடும் அலகை பிடிக்கலாம். இது சிலீவை விட இரண்டு மடங்கு நீளமாக இருக்கும்.

சாக்கெட்டின் மேல்பகுதி சரிவுக்காம்பு கொண்டதாகவும், சுழற்றியின் சரிவுத்துளையில் பொருத்த கூடியதாகவும் இருக்கும்.

சாக்கெட்டின் உடல் பாகத்தின் அடியில் சரிவுத்துளை இருக்கும். இது சுழற்றியின் சரிவுத்துளையை விட பெரிதாக இருக்கும். இதில் துளையிடும் அலகினை பொருத்தலாம்.

துளையிடும் அலகினை, சுழற்றியிலிருந்து வெளியேற்ற வேண்டுமானால், சாக்கெட்டை வெளியேற்ற தேவையில்லை. துளையிடும் அலகை மட்டுமே நேரடியாக சாக்கெட்டிலிருந்து வெளியேற்றலாம்.

1. டிரில் கவ்வி (Drill Chuck)

சிறிய அளவுள்ள, நேரான காம்பு கொண்ட துளையிடும் அலகினை மட்டும் பிடிக்க பயன்படும் சாதனம் டிரில் கவ்வி ஆகும். டிரில் கவ்வியின் மேல்பகுதியில் சரிவுக் காம்பு கொண்ட தலைப்பகுதியும், அடிப்பகுதியில் வெட்டுளியை பிடிப்பதற்கான மூன்று தாடைகளும், மையப்பகுதியில் தாடைகளை மேலும், கீழும் நகற்ற உதவும் பெவல் பல்லிணை அமைப்பும் இருக்கும். அடிப்பகுதியில் உள்ள நகரும் தாடைகளை கொண்டு துளையிடும் அலகினை

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 49 2/1/2023 1:19:13 PM

பிடிக்கலாம். மேல் பகுதியில் உள்ள சரிவுகாம்பு, சுழற்றியில் பொருத்தப்படும்.



டிரில் கவ்வி (Drill Chuck)

இதன் வகைகள்:

a) விரைவு மாற்றுக் கவ்வி (Quick change chuck).

b) மூன்று தாடை கொண்ட தன் மைய கவ்வி (Three Jaw Self Centering Chuck).

2.10 துளையிடும் இயந்திரத்தில் செய்யப்படும் வேலைகள் (Drilling Machine Operations)

துளையிடும் இயந்திரத்தில் துளையிடுவது தான் முக்கியமான வேலை என்றாலும் அதனை சார்ந்து பல்வேறு வெட்டுளிகளைப் பயன்படுத்தி கீழ்கண்ட வேலைகளை செய்யலாம்.

1. துளையிடுதல் (Drilling)
2. துளை சுரண்டுதல் (Reaming)
3. துளை பெருக்குதல் (Boring)
4. துளையின் முனையை பெருக்குதல் (Counter boring)
5. துளையின் முனையை கூம்பு வடிவமாக்குதல் (Counter sinking)
6. துளையை சுற்றி சமப்படுத்துதல் (Spot Facing)
7. மரையிடுதல் (Threading)
8. வளையம் போல் வெட்டுதல் (Trepanning)

துளையிடுதல் (Drilling)

சுழலும் துளையிடும் அலகினை கொண்டு உலோகப் பணிப்பொருளில் தேவையான விட்டத்திற்கும், ஆழத்திற்கும் வட்டமான புதிய துளையை ஏற்படுத்துவதற்கு "துளையிடுதல்" என்று பெயர்.

இவ்வாறு துளையிடப்பட்ட துளையின் அளவு துல்லியமாக இருக்காது. உட்பரப்பு சொரசொரப்பாக இருக்கும். சுழற்றியின் அதிர்வு மற்றும் துளையிடும் அலகின் குறைபாடே இதற்கு காரணமாகும். 12 மிமீ விட்டமுள்ள துளையிடும் அலகு மூலம் துளையிட்டால் 0.125 மிமீ கூடுதலாக துளை அமையும். புதிதாக பணிப்பொருளில் துளையினை ஏற்படுத்துவதற்கு முன், ஒன்றுக்கொன்று இரு செங்குத்து கோடுகளை வரையவேண்டும். சென்டர் பஞ்சினை பயன்படுத்தி புள்ளி குத்த வேண்டும். பிறகு துளையிடும் அலகினை மையத்தில் படியவைத்து, துளையினை ஏற்படுத்த வேண்டும்.



துளையிடுதல் (Drilling)

துளை சுரண்டுதல் (Reaming)

துளையிடும் அலகு மூலம் போடப்பட்ட துளையின் உட்பரப்பு மற்றும் அதன் அளவு சரியாக அமையாது. இக்குறைபாட்டை

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 50 2/1/2023 1:19:13 PM

நீக்க துளை சுரண்டி எனப்படும் பலமுனை வெட்டுளியை பயன்படுத்தி துளையின் உட்பரப்பை சரிசெய்வதற்கும், சொரசொரப்புத் தன்மையை நீக்குவதற்கும் துளை சுரண்டுதல் என்று பெயர். துளை சுரண்டும் பொழுது சுழற்றியின் வேகம், துளையிடும் வேகத்தில் பாதிதான் பயன்படுத்த வேண்டும். துளை சுரண்டுதல் மூலம் 0.375 மிமீ வரை உலோகத்தை நீக்கலாம்.



துளை சுரண்டுதல் (Reaming)

துளை பெருக்குதல் (Boring)

துளை பெருக்குதல் என்பது ஏற்கனவே போடப்பட்ட துளையின் உட்பரப்பை தேவையான விட்டத்திற்கு பெரிதாக்கும் செயலாகும். துளை பெருக்குதல் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் செய்யலாம்.

a) குறிப்பிட்ட அளவுள்ள துளையிடும் அலகு கிடைக்காத போதும்.

b) மிகப்பெரிய துளை போட வேண்டிய போதும்.

c) குறிப்பிட்ட அளவிற்குத் துல்லியமான துளையை பெரிதாக்குவதற்கும்

d) ஏற்கனவே வார்ப்பு செய்து உண்டாக்கப்பட்ட துளைகளை இயந்திரப்பணி செய்து, சரி செய்யும்போதும்,

d) துளை நீள்வட்டமாக இருப்பின் அதனை வட்டமாக சரி செய்யும் போதும், துளை பெருக்குதலை செய்யலாம்.

இவ்வேலையை செய்வதற்கு போரிங் வெட்டுளி எனப்படும் ஒரு முனை வெட்டுளி பயன்படுகிறது. இவ்வெட்டுளியானது வெட்டுளி தண்டில் பிடிக்கப்படுகிறது. இத்தண்டில் சரிவுக்காம்பு இருக்கும். இக்காம்பானது சுழற்றி அல்லது சாக்கெட் மூலம் பொருத்தப்படுகிறது. துளை துல்லியமாக அமைய பணிப்பொருளில் தேவையான துளையின் அளவைவிட சற்று சிறிதாக துளையிட்டு பிறகு துளை பெருக்க வேண்டும். துல்லியமான துளையிடும் இயந்திரத்தை பயன்படுத்தி 0.00125 மிமீ அளவிற்கு துளை பெருக்கலாம்.

துளை பெருக்குதல் செய்யும்போது சுழற்றியின் வேகம், துளை சுரண்டும் வேலையை விட குறைவான வேகத்தில் இருத்தல் வேண்டும்.



துளை பெருக்குதல் (Boring)

துளையின் முனையை பெருக்குதல் (Counter Boring)

ஏற்கனவே போடப்பட்ட துளையின் உட்பகுதியில் சிறிது ஆழத்திற்கும், தேவையான விட்டத்திற்கும், பெரிதாக்கும் முறையை துளையின் முனையை பெருக்குதல் என்கிறோம்.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 51 2/1/2023 1:19:14 PM



துளையின் முனையை பெருக்குதல்
(Counter Boring)

இது போல்ட் மற்றும் ஸ்டட் ஆகியவற்றின் தலைப்பகுதி துளையினுள் உட்சென்று படிய பயன்படுகிறது. இவ்வேலைக்கு "துளை முனை பெருக்கி" எனும் பலமுனை வெட்டுளி பயன்படுகிறது. வெட்டுளியின் காம்பு பாகம் நேராகவோ அல்லது சாய்வாகவோ இருக்கும். இவ்வேலை செய்யும் போது வெட்டும் வேகம் துளையிடும் செயலின் போது பயன்படுத்தும் வேகத்தை விட குறைவாக இருத்தல் வேண்டும்.

துளையின் முனையை கூம்பு வடிவத்தில் பெருக்குதல் (Counter sinking)



துளையின் முனையை கூம்பு வடிவத்தில்
பெருக்குதல் (Counter sinking)

ஏற்கனவே போடப்பட்ட துளையின் மேற்பகுதியில் சிறிது ஆழத்திற்கு மட்டும் கூம்பு வடிவத்தில் பெரிதாக்குவதை துளையின் முனையைக் கூம்பு வடிவத்தில் பெருக்குதல் என்கிறோம். இக்கூம்பு வடிவத்தின் கோணம் 60°, 90°–களில் இருக்கும். இதில் மரையாணி மற்றும் ரிவிட் ஆகியவற்றின் தலைப்பகுதி சமமாக துளையினுள் படிய பயன்படுகிறது.

மரையிடுதல் (Tapping)

ஏற்கனவே துளையிடப்பட்ட பணிப்பொருளில், துளை வழியாக டாப் என்ற வெட்டுளியைப் பயன்படுத்தி உட்பக்க மரையிடுவதை குறிக்கும். கையினால் இயக்கியோ அல்லது இயந்திர விசை மூலமாகவோ மரையிடலாம்.



மரையிடுதல் (Tapping)

டாப்பினை துளையின் உட்பகுதியில் செலுத்தி திருகும் பொழுது அது உலோகத்தை வெட்டியெடுத்து உட்பக்கத்தில் மரையை ஏற்படுத்துகிறது.

டாப் – துளையின் அளவை கணக்கிடுதல்

டாப் – துளையின் அளவு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

$$D=T-2d$$

'D'– என்பது டாப் துளையின் அளவு, T–என்பது டாப்பின் விட்டம் 'd' என்பது மரையின் ஆழம் ஆகும்.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 52 2/1/2023 1:19:14 PM

செயல்முறையில்

டாப் துளை 'D' அளவு = டாப்பின் வெளிவிட்டம் x 0.8

= 0.8T

என்ற சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

2.11 வெட்டும் வேகம் (Cutting speed)

வேகம் என்பது ஒரு நிமிட நேரத்தில் ஒரு புள்ளி எவ்வளவு தூரம் நகரும் என்பதைக் குறிக்கும். துளையிடும் இயந்திரத்தில் வெட்டும் வேகம் என்பது துளையிடும் அலகு சுழலும் போது அதன் வெட்டும் முனையில் ஒரு புள்ளி ஒரு நிமிட நேரத்தில் வட்டப்பாதையில் சுற்றும் மொத்த தூரத்தைக் குறிக்கும் இதனை மில்லிமீட்டர் / நிமிடம் என்ற அலகால் குறிக்கலாம்.

வெட்டும் வேகம் (C.S) = $\frac{\pi dn}{1000}$ மீட்டர் / நிமிடம்

இதில் $\pi = \frac{22}{7}$ (அ) 3.14,

d = துளையிடும் அலகின் விட்டம் மில்லி மீட்டரில்

n = rpm of the spindle, அதாவது சுழற்றி ஒரு நிமிடத்தில் சுழலும் சுற்றுகளின் எண்ணிக்கை.

வெட்டும் வேகமானது பயன்படுத்தப்படும் வெட்டுளி, உலோகம், உலோகத்தின் தன்மை, துளையிட வேண்டிய பரப்பின் தன்மை, பணிப்பொருள் பிடிக்கப்பட்டுள்ள முறை, துளையிடும் இயந்திரத்தின் அமைப்பு, சக்தி, உறுதி ஆகியவற்றை பொறுத்து மாறுபடும்.

எடுத்துக்காட்டு கணக்கு:

எஃகு உலோகத்தாலான 20 மிமீ விட்டம் கொண்ட துளையிடும் அலகு. நிமிடத்திற்கு 25 மீட்டர் வெட்டும் வேகத்தில் துளையிடுகிறது எனில் சுழற்றியின் வேகம் என்ன?

கொடுக்கப்பட்ட விவரம்:

துளையிடும் அலகின் விட்டம் d = 20 மிமீ,

வெட்டும் வேகம் (C.S) = 25 மீ

$$\pi = \frac{22}{7} \text{ (or) } 3.14.$$

சூத்திரத்தின்படி, C.S = $\frac{\pi dn}{1000}$ மீ / நிமிடம்

$$25 = \frac{\pi \times 20 \times n}{1000}$$

$$n = \frac{25 \times \overset{50}{\cancel{1000}}}{\pi \times \underset{1}{\cancel{20}}}$$

$$\frac{25 \times 50}{3.14}$$

சுழற்றியின் வேகம் n = 398 rpm.

2.12 ஊட்டம் (Feed)

துளையிடும் போது சுழற்றி ஒரு முழு சுற்று சுற்றும் போது, கீழே இறங்கும் தூரத்திற்கு ஊட்டம் என்று பெயர். இதை மில்லி மீட்டரில் குறிப்பிட வேண்டும். சில சமயம் ஒரு நிமிடத்தில் எவ்வளவு ஆழம் துளையிடப்படும் எனவும் குறிப்பிடப்படும். ஊட்டமானது துளையிடப்படும் உலோகம், இயந்திரத்தின் உறுதி, சக்தி, துளையிடப்படும் ஆழம் பரப்பின் தன்மை ஆகியவற்றை பொறுத்து மாறுபடும்.

2.13 வெட்டும் ஆழம் (Dept of cut)

வெட்டும் ஆழம் என்பது துளையிடும் அலகின் விட்டத்தில் பாதி அளவிற்கு சமம். அதாவது 'd' என்பது துளையிடும் அலகின் விட்டம் எனக் கொண்டால் வெட்டும் ஆழம் D = d/2 மிமீ ஆகும்.

செயல்பாடுகள்

- மாணவர்களை பள்ளிக்கு அருகில் உள்ள பணிமனை, பலவகை தொழில் நுட்பக்கல்லூரி, பொறியியல் கல்லூரிகளுக்கு அழைத்து சென்று பல்வேறு வகையான துளையிடும் இயந்திரத்தில் செய்யப்படும் துளையிடும் வேலையினை கண்டறிய செய்தல்.
- பள்ளியில் உள்ள கடைசல் இயந்திரம், துளையிடும் இயந்திரத்தினை பயன்படுத்தி மாணவர்களுக்கு துளையிடும் வேலையை செய்திட பயிற்சி அளித்தல்.

வினாக்கள்

பகுதி – அ (1 மதிப்பெண்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மின்சாரத்தால் இயங்கும் துளையிடும் இயந்திரத்தை கண்டு பிடித்தவர்.
   அ) ஹென்றிமாட்ஸ்லே
   ஆ) ஆர்த்தர்ஜேம்ஸ்அர்னாட்
   இ) எலிவெட்னி
   ஈ) ஜேம்ஸ்நாஸ்மித்

2. கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களில் பயன்படுத்தப்படும் துளையிடும் இயந்திரம்.
   அ) மேடையில் அமைந்த துளையிடும் இயந்திரம்
   ஆ) கையிலேந்தி துளையிடும் இயந்திரம்
   இ) கூட்டுத் துளையிடும் இயந்திரம்
   ஈ) பல சுழற்றி துளையிடும் இயந்திரம்

3. துளை பெருக்கி என்பது எவ்வகை வெட்டுளி.
   அ) பலமுனை வெட்டுளி
   ஆ) ஒரு முனை வெட்டுளி
   இ) வெட்டி துண்டாக்கும் வெட்டுளி
   ஈ) ரம்பப்பல் வகை வெட்டுளி

4. ஆரம்வழி நகரும் துளையிடும் இயந்திரத்தினை பயண்படுத்தி ஏற்படுத்தும் துளையின் விட்டம்.
   அ) 10 மிமீ–க்கு மேல்
   ஆ) 12 மிமீ–க்கு மேல்
   இ) 50 மிமீ–க்கு மேல்
   ஈ) 70 மிமீ–க்கு மேல்

5. துளையிடும் அலகுகள் செய்யப்படும் உலோகம்.
   அ) குறைந்த கரி கொண்ட எஃகு
   ஆ) அதிவேக எஃகு அல்லது அதிக கரி கொண்ட எஃகு
   இ) பித்தளை
   ஈ) செராமிக்ஸ்

6. டிரில் கவ்வியில் மூன்று தாடைகளுக்கு இடையே உள்ள கோணம்.
   அ) 118° ஆ) 120°
   இ) 135° ஈ) 59°

7. உள் மரையிடும் கருவியினை (Tap) பயன்படுத்தி மரையிடுவதற்கான துளையினை கணக்கிடுவதற்கான சூத்திரம்.
   அ) $D = T + 2d$
   ஆ) $D = T \times 2d$
   இ) $D = T - 2d^{\circ}$
   ஈ) $D = T \div 2d$

8. சரிவு சாவி செய்யப்படும் உலோகம்
   அ) கார்பன் எஃகு
   ஆ) வெட்டுளிக்கான எஃகு
   இ) கடின எஃகு
   ஈ) அதிவேக எஃகு

9. துளையிடும் அலகில் உள்ள பள்ளத்தின் பெயர்
   அ) V–வடிவ பள்ளம்
   ஆ) U– வடிவ பள்ளம்
   இ) சுருள் வடிவபள்ளம்
   ஈ) நேர்வடிவ பள்ளம்

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 54 2/1/2023 1:19:15 PM

பகுதி – ஆ (3 மதிப்பெண்)

ஓரிரு வரிகளில் விடையளிக்க

10. துளையிடுதல் என்றால் என்ன?
11. துளையிடும் இயந்திரத்தின் வகைகள் நான்கினை கூறு.
12. ஆரம்வழி நகரும் துளையிடும் இயந்திரத்தின் சிறப்பு அம்சங்கள் யாவை?
13. துளையிடும் அலகின் வகைகள் யாவை?
14. ஃபுளூட்டின் பயன்கள் யாவை?
15. துளையிடும் இயந்திரத்தில் வெட்டுளிகளை பிடிக்கும் முறைகள் நான்கினை கூறு.
16. துளை சுரண்டுதலுக்கும், துளை பெருக்குதலுக்கும் உள்ள வேறுபாடு இரண்டினை கூறு.
17. துளை பெருக்குதல் எத்தகைய சந்தர்ப்பங்களில் செய்யலாம்?
18. துளையிடும் இயந்திரத்தின் வெட்டும் வேகம் என்பதை வரையறு.

பகுதி – இ (5 மதிப்பெண்)

ஒரு பக்க அளவில் விடையளி.

19. மேடை வகை அமைந்த துளையிடும் இயந்திரத்தின் அமைப்பை படம் வரைந்து விளக்குக.
20. துளையிடும் இயந்திரத்தின் அளவை எவ்வாறு குறிப்பிடுவாய்?
21. துளையிடும் அலகினை பிடிக்கும் முறைகளில் இரண்டினை படம் வரைந்து விளக்குக.

பகுதி – ஈ (10 மதிப்பெண்)

விரிவான விடையளி.

22. ஆரம் வழி நகரும் துளையிடும் இயந்திரத்தின் அமைப்பை படம் வரைந்து விளக்குக.
23. துளையிடும் இயந்திரத்தில் பணிப்பொருளை பிடிக்கும் முறைகளில் இரண்டினை படத்துடன் விளக்குக.
24. துளையிடும் அலகின் அமைப்பை படம் வரைந்து, பாகங்களை விளக்குக
25. துளையிடும் இயந்திரத்தில் செய்யப்படும் வேலைகளை கூறி ஏதேனும் இரண்டினை படத்துடன் விளக்குக.

XII BME_Tamil version CHAPTER 02-2023.indd 55 2/1/2023 1:19:15 PM

www.tnschoolbooks.in



பாடம்
3

உருவமைக்கும் இயந்திரம் (Shaping Machine)

கற்றலின் நோக்கம்

- பணிமனைகளில் உள்ள இயந்திரங்களில் முக்கிய இயந்திரமான உருவமைக்கும் இயந்திரம் பற்றியும் அதன் பாகங்கள், பயன்படுத்தப்படும் இயந்திர நுட்பங்கள் இயந்திரத்தில் செய்யப்படும் பல்வேறு வேலைகள் ஆகியவற்றைப் பற்றி மாணவர் தெரிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

3.1 அறிமுகம்
3.2 இயந்திரப்பணி செய்யும் முறை
3.3 உருவமைக்கும் இயந்திரத்தின் பாகங்கள்
3.4 உருவமைக்கும் இயந்திரத்தின் வகைகள்
3.5 வேகமாக திரும்பச் செய்யும் இயந்திர நுட்பம்
3.6 உருவமைக்கும் இயந்திரத்தின் அளவைக் குறிப்பிடுதல்
3.7 அசைவு நீளம் – திமிசின் இருப்பிடம் – மாற்றும் விதம்
3.8 பணிமேடையை நகர்த்தும் விதம்
3.9 சுழல் வகை வெட்டுளித் தலை
3.10 பணிபொருளை பிடிக்கும் உபகரணங்கள்
3.11 உருவமைக்கும் இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் வெட்டுளிகள்
3.12 பணிமேடை, வைஸ், வெட்டுளித்தலை – துல்லியமாக அமைத்தல்
3.13 உருவமைக்கும் இயந்திரத்தில் செய்யப்படும் பல்வேறு வேலைகள்
3.14 சிறப்பு வேலைகள்
3.15 வெட்டும் வேகம், வெட்டும் ஆழம், ஊட்டம்
3.16 பாதுகாப்புக் குறிப்புகள்.

3.1 அறிமுகம்

ஒழுங்கற்ற உருவமுள்ள ஒரு உலோகப் பணிப்பொருளை, முன்னும் பின்னும் நகரும் ஒரு முனை வெட்டுளியைக் கொண்டு நமக்கு தேவையான வடிவத்தில் வெட்டி அல்லது செதுக்கி எடுக்கும் முறைக்கு "உருவமைத்தல்" என்று பெயர். தட்டையான பரப்புகளை இயந்திரப்பணி செய்யும் உருவமைக்கும் இயந்திரத்தை ஜேம்ஸ்நாஸ்மித் என்ற ஆங்கிலேயர் 1836–இல் வடிவமைத்தார்.

3.2 இயந்திரப் பணி செய்யும் முறை: (Machining process)

பணிமேடை மீது பொருத்தப்பட்டுள்ள பணிப்பொருள் மீது ஒரு முனை வெட்டுளியை நகர செய்ய வேண்டும். வெட்டுளியைத் தாங்கியுள்ள திமிசு படுக்கை

www.tnschoolbooks.in

உங்களுக்குத் தெரியுமா?

உருவமைக்கும் இயந்திரத்தை ஜேம்ஸ்நாஸ்மித் (James Nasmith) என்ற ஆங்கிலேயர் கி.பி.1836–இல் வடிவமைத்தார். சம மட்ட பரப்புகளை இழைக்க இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தினார். பிறகு பல்வேறு வகையான பரப்புகளை (படுக்கை, செங்குத்து சாய்வு, குழிந்த, குவிந்த) இழைக்கும் இயந்திரத்தை வடிவமைத்தார்.

ஜேம்ஸ்நாஸ்மித்

வசத்தில் முன்னோக்கி நகரும்போது வெட்டுளி பணிபொருளை வெட்டியெடுக்கும்.

பின்னோக்கி வரும் போது பணிபொருளை வெட்டி எடுக்காது. முன்னோக்கிய வெட்டும் அசைவின் போது திமிசு மெதுவாக நகரும். பின்னோக்கிய வெற்று அசைவின் போது திமிசு வேகமாக நகரும். திமிசு முன்னும், பின்னும் நகரும் தூரம் சமமாக இருந்தாலும் பின்னோக்கி வரும் போது வேகமாக வருவதால் வெற்று அசைவு எடுத்துக் கொள்ளும் நேரம் குறைவு. இது வேகமாக திரும்பச் செய்யும் இயந்திர நுட்பம் மூலம் சாத்தியமாகிறது. இயந்திரத்தில் படுக்கையான பரப்புகளை இயந்திரப்பணி செய்யும் போது வெட்டுளிக்கு குறுக்கு வசத்தில் பணிமேடையை நகர்த்தி பணிப்பொருளுக்கு ஊட்டம் கொடுக்க வேண்டும். செங்குத்து பரப்புகளை இயந்திரப்பணி செய்யும் போது வெட்டுளியை கீழ் நோக்கி இறக்கியோ அல்லது பணிமேடையை மேல் நோக்கி உயர்த்தியோ பணிபொருளுக்கு ஊட்டம் கொடுக்க வேண்டும். சாய்வான பரப்புகளை இயந்திரப்பணி செய்யும் போது சுழல் வகை வெட்டுளித் தலையை தேவையான கோணத்திற்கு திருப்பி வைத்து பணிப்பொருளுக்கு வெட்டுளித் தலையின் மேல் உள்ள கைப்பிடி மூலம் ஊட்டம் கொடுக்க வேண்டும்.

3.3 உருவமைக்கும் இயந்திரத்தின் பாகங்கள்

அடிப்பாகம் : (Base)

இது வார்ப்பு இரும்பால் செய்யப்பட்ட கூடு போன்ற பாகம் ஆகும். இயந்திரம் முழுவதையும் இந்த அடிப்பாகம்தான் தாங்கி நிற்கிறது. தொழிற்சாலைகளில் கான்கிரீட் தரையுடன் கூடிய போல்ட் மூலம் பொருத்தப்பட்டிருக்கும்.



இயந்திரப் பணி செய்யும் முறை (Machining process)

XII BME_Tamil version CHAPTER 03-2023.indd 57 2/1/2023 1:20:23 PM



உருவமைக்கும் இயந்திரம்

XII BME_Tamil version CHAPTER 03-2023.indd 58 2/1/2023 1:20:23 PM

தூண்பாகம் : (Column)

இது அடிப்பாகத்தின் மேல் செங்குத்தாக உள்ள பெட்டி போன்ற பாகம் ஆகும். இதன் மேல் பகுதியில் இரண்டு வழித்தடங்கள் நுணுக்கமாக இயந்திரப்பணி செய்யப்பட்டிருக்கும். இதில் திமிசு என்ற பாகம் முன்னும், பின்னும் நகரும். தூண்பாகத்தின் முன் பக்கத்தில் செங்குத்தாக இரண்டு வழித்தடங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதில் குறுக்கு நழுவி என்ற பாகம் மேலும் கீழும் நகரும். தூண் பாகத்தின் உட்பகுதியில், வேகமாக திரும்பச் செய்யும் இயந்திர நுட்பம் அசைவு நீளத்தை மாற்றும் இயந்திர நுட்பம் ஆகியவை அமைக்கப்பட்டிருக்கும்.

குறுக்கு நழுவி : (Cross Slide)

இது தூண் பாகத்தின் முன் பகுதியில் செங்குத்தாக உள்ள வழித்தடங்களுக்கு குறுக்காக அமைந்துள்ள பாகமாகும். இதை மேலும் கீழும் ஏற்றி இறக்கும்போது பணிமேடை செங்குத்தாக நகருகிறது. இது பெட்டி போன்று இருப்பதால் இதனுள் குறுக்கு ஊட்ட மரைத்தண்டு செங்குத்து ஊட்ட மரைத்தண்டு ஆகியவை பொருத்தப்பட்டுள்ளது.

பணி மேடை : (Table)

பணிமேடை என்பது பணிபொருளைத் தாங்கிப்பிடிக்கும் முக்கியமான பாகம் ஆகும். பணிமேடை குறுக்கு நழுவியின் மீதுள்ள சேடில் மீது பொருத்தப்பட்டுள்ளது. இதன் இரு பக்கங்களிலும் T–வடிவ பள்ளங்கள் வெட்டப்பட்டிருக்கும். ஊட்டம் தரும் மரைத்தண்டுகள் மூலம் பணிமேடையைக் குறுக்கு வசத்திலோ, செங்குத்தாகவோ நகர்த்தலாம்.

பணிமேடை மீது வைஸ், பிடிப்பான்கள், பிடிப்புப் பட்டைகள் போன்றவற்றைப் பொருத்தி பணிப்பொருட்களை பிடிக்கலாம்.

திமிசு : (Ram)

திமிசு என்பது வெட்டுளித் தலையை முன் பகுதியில் தாங்கி நிற்கும் பாகம் ஆகும். தூண்பாகத்தின் மேல் பகுதியில் உள்ள வழித்தடங்கள் வழியாக முன்னும், பின்னும் நகரும். வேகமாக திரும்பச் செய்யும் இயந்திர நுட்பம் மூலமாக திமிசு முன்னும், பின்னும், நகர்த்தப்படுகிறது. பணிப்பொருளின் அளவுக்கேற்ப திமிசின் இருப்பிடத்தை மாற்றும் அமைப்பு திமிசின் உட்புறத்தில் உள்ளது.

வெட்டுளித் தலை (Tool Head)

வெட்டுளியைத் தாங்கிப் பிடிக்கும் வெட்டுளித் தலையானது திமிசு என்ற பாகத்தின் முன் முனையில் பொருத்தப்பட்டுள்ளது. சுழல் வகை வெட்டுளித் தலையை எந்த கோணத்தில் வேண்டுமானாலும் திருப்பி வைத்து இயந்திரப்பணி செய்யலாம். ஊட்டம் தரும் கைப்பிடியின் மூலம் வெட்டுளியை மேலும் கீழும் நகர்த்தி ஊட்டம் தரலாம். இதில் கோண அளவுகள் உள்ளதால், சாய்வு பரப்புகளை இயந்திரப்பணி செய்வது எளிது.

3.4 உருவமைக்கும் இயந்திரத்தின் வகைகள் : (Types of Shaper)

உருவமைக்கும் இயந்திரத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. அவை;

1. திமிசை நகர்த்தும் இயந்திர நுட்பத்தைக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

   அ. கிராங்க் வகை

   ஆ. திரவவியல் வகை

   இ. பல்லிணை வகை.

2. பணிமேடை வகை அமைப்பைப் பொறுத்து நான்கு வகையாக பிரிக்கலாம்.

   அ. சாதாரண சிறு வேலை செய்யும் உருவமைக்கும் இயந்திரம்

XII BME_Tamil version CHAPTER 03-2023.indd 59 2/1/2023 1:20:24 PM



ஆ. கனமான வேலை செய்யும் உருவமைக்கும் இயந்திரம்

இ. வரையறுக்கப்பட்ட உருவமைக்கும் இயந்திரம்

ஈ. அனைத்திற்கும் ஏற்ற உருவமைக்கும் இயந்திரம்.

3. திமிசு நகரும் விதத்தைப் பொறுத்து இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அ. படுக்கை வகை உருவமைக்கும் இயந்திரம்

ஆ. செங்குத்து வகை உருவமைக்கும் இயந்திரம்

4. பணிப்பொருளை வெட்டும் விதத்தை பொறுத்து இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அ. முன்னோக்கி வெட்டும் முறை

ஆ. பின்னோக்கி வெட்டும் முறை

கிராங்க் உருவமைக்கும் இயந்திரம் : (Crank Type Shaper)

மின்மோட்டாரின் சுழலும் விசையைத் திமிசுக்கு முன்னும் பின்னும் நகரும் விசையாக கிராங்க் மற்றும் சிலாட்டட் லிங்க் இயந்திர நுட்பம் மாற்றித் தருகிறது. திமிசு முன்னும் பின்னும் நகரும் தூரம் சமமாக இருப்பினும் முன்னோக்கி நகருவதைக் காட்டிலும் பின்னோக்கி நகரும் போது வேகமாக நகரும் எல்லா உருவமைக்கும் இயந்திரங்களும் இந்த இயந்திர நுட்பத்தின் அடிப்படையில் தான் இயங்குகிறது.

திரவவியல் உருவமைக்கும் இயந்திரம்: (Hydraulic Shaper)

திரவவியல் உருவமைக்கும் இயந்திரத்தில் திமிசு என்ற பாகம் பிஸ்டனுடன் இணைக்கப்பட்டு உள்ளது. அதிக

XII BME_Tamil version CHAPTER 03-2023.indd 60 2/1/2023 1:20:24 PM

   ஈ. பெரும் பழுது பார்ப்பு (அ) திருத்தி அமைக்கும் வேலை
3. பட்டை, பேரிங், சங்கிலி போன்றவற்றைப் பராமரித்தல்
   அ. தின பராமரிப்பு
   ஆ. வாரப் பராமரிப்பு
   இ. தடுப்பு பராமரிப்பு
   ஈ. பெரும் பழுது பார்ப்பு

பகுதி – ஆ (3 மதிப்பெண்)

ஓரிரு வரிகளில் விடையளி

4. பராமரித்தல் வரையறு
5. பராமரித்தலின் நோக்கம் யாது?
6. தேய்மானம் என்பது யாது?
7. பிடிப்புத் தளர்ச்சி – வரையறு.
8. உயவிடல் என்றால் என்ன?
9. உயவிடல் வகைகள் யாவை?
10. பராமரித்தல் வகைகள் யாவை?

XII BME_Tamil version CHAPTER 06-2023.indd 117 2/1/2023 1:29:43 PM

பகுதி –இ (5 மதிப்பெண்)

ஒரு பக்க அளவில் விடையளி

11. உயவிடல் விவரி.
12. உயவிட வேண்டிய முக்கிய இயந்திரப் பாகங்கள் யாவை?
13. வளையத்தால் உயவிடல் படம் வரைந்து விளக்கு.
14. திரியால் உயவிடல் படம் வரைந்து விளக்கு.
15. தெளித்தலால் உயவிடல் விவரி.
16. கிரீஸ் மூலம் உயவிடல் படம் வரைந்து விளக்கு.
17. வழக்கப் பராமரிப்பினை விவரி.
18. பெரும் பழுது பார்ப்பு (அ) திருத்தி அமைக்கும் வேலை விளக்குக.

பகுதி – ஈ (10 மதிப்பெண்)

விரிவான விடையளி

19. உயவிடுதலின் வகைகள் இரண்டினைப் படம் வரைந்து விளக்குக.
20. தடுப்பு பராமரிப்பினை விவரி.
21. இயந்திரம் செயலற்றுப் போன போது மேற்கொள்ளும் பராமரிப்பினை விவரி.
22. திட்டமிட்ட பராமரிப்பு செயல் என்பதனை விளக்குக.

XII BME_Tamil version CHAPTER 06-2023.indd 118 2/1/2023 1:29:43 PM

www.tnschoolbooks.in

பாடம் 7

வெல்டிங் (WELDING)

கற்றலின் நோக்கம்

- வெல்டிங் பற்றியும், அதன் பயன்கள் பற்றியும், அதில் உள்ள பல வகைகள் அதன் மூலம் தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் விதம் பற்றியும், வெல்டிங் பயன்படுத்தப்படும் இடங்கள் பற்றியும் மாணவர் அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

7.1 அறிமுகம்
7.2 வெல்டிங் செய்யும் முறைகள்
7.3 வெல்டிங் வகைகள்
7.4 ஆர்க் வெல்டிங்
7.5 கேஸ் வெல்டிங்
7.6 ஆர்க் வெல்டிங் – கேஸ் வெல்டிங் வேறுபாடுகள்
7.7 வெல்டிங் சார்ந்த செயல்முறைகள்
7.8 வெல்டிங் இணைப்பு வகைகள்
7.9 பாதுகாப்பு குறிப்புகள்

7.1 அறிமுகம்:

ஒரே மாதிரியான இரண்டு உலோகங்களை அழுத்தம் கொடுக்காமல் வெப்பத்தைப் பயன்படுத்தி இணைக்கும் முறைக்கு வெல்டிங் என்று பெயர். இதை "பற்றிணைத்தல்" என்றும் கூறுவர். பெரும்பாலான பொருட்களைத் தயாரிக்க பற்றிணைத்தல் முறை தொழிற்சாலைகளில் அதிகமாகப் பயன்படுகிறது.

அழுத்தத்தைப் பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ வெல்டிங் செய்யலாம். உலோக பாகங்களின் விளிம்புகளை உருக வைத்தும் பிளாஸ்டிக் நிலைக்குக் கொண்டு வந்தும் வெல்டிங் செய்யலாம். வெல்டிங் செய்யும் போது நிரப்பு உலோகங்களைப் பயன்படுத்தியும் அல்லது பயன்படுத்தாமலும் செய்யலாம். வெல்டிங் செய்து உலோகங்களில் நிரந்தர இணைப்புகள் உண்டாக்கலாம்.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 119 2/1/2023 1:31:36 PM

www.tnschoolbooks.in

உங்களுக்குத் தெரியுமா?

ஆர்க் வெல்டிங் கண்டறிந்தவர் சர்.ஹம்பரி டேவிட் இரண்டு கார்பன் எலக்ட்ராடுகளில் பேட்டரியை பயன்படுத்தி தீச்சுடர் உண்டாவதை கண்டார்.

கேஸ் வெல்டிங் கண்டறிந்தவர் நிக்கோல்பெனர்தாஸ் என்ற ரஷிய அறிஞர். ஆக்சிஜன் – அசிட்டிலின் மூலம் உயர் வெப்ப தீச்சுடரை கண்டார். அது இரண்டு உலோகங்களை இணைத்து வெல்டிங் செய்ய பயன்பட்டது.

7.2 வெல்டிங் செய்யும் முறைகள்

மோட்டார் வாகனங்கள், ஆகாய விமானங்கள், இரயில் பெட்டிகள், இயந்திர பாகங்கள், கொதிகலன்கள், கப்பல் ஆகியவை தயார் செய்யும் தொழிற்சாலைகளில் வெல்டிங் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக உலோகங்களைப் பயன்படுத்தும் அனைத்து தொழிற்சாலைகளிலும் வெல்டிங் அதிகமாகப் பயன்படுகிறது.

வெல்டிங் இரண்டு வகைப்படும்:

1. பிளாஸ்டிக் நிலை வெல்டிங். (Plastic Welding)
2. உருகிய நிலை வெல்டிங். (Fusion Welding)

பிளாஸ்டிக் நிலை வெல்டிங் முறையில் உலோகப்பொருட்கள் பிளாஸ்டிக் நிலைக்கு வெப்பப்படுத்தப்படுகிறது. பிறகு ஒன்றாக வைத்து அழுத்தப்பட்டு இணைக்கப்படுகிறது. பிளாஸ்டிக் நிலை வெல்டிங்கிற்கு அழுத்த வெல்டிங் என்றும் பெயர்.

உருகிய நிலை வெல்டிங் முறையில் உலோக விளிம்புகள் உருகும் வரை வெப்பப்படுத்தப்படுகின்றன. பின்னர் அவை குளிரும் போது திடமாகிறது. இங்கு அழுத்தம் பயன்படுவதில்லை. இதனால் இது அழுத்தமில்லா வெல்டிங் முறை என்று அழைக்கப்படுகிறது. கேஸ், வெல்டிங் மற்றும் ஆர்க் வெல்டிங் முறைகள் இவ்வகையைச் சார்ந்தது.

7.3 வெல்டிங் வகைகள் (Types of Welding)

1. ஆர்க் வெல்டிங் (Arc welding)
   அ. கார்பன் ஆர்க்,
   ஆ. மெட்டல் ஆர்க்,
   இ. மெட்டல் இனர்ட் கேஸ்,
   ஈ. டங்ஸ்டன் இனர்ட் கேஸ்,
   உ. அட்டாமிக் ஹைட்ரஜன் கேஸ்,
   ஊ. பிளாஸ்மா ஆர்க்,
   எ. சப்மெர்ஜ்டு ஆர்க்,
   ஏ. எலக்ட்ரோ சிலாக்.
2. கேஸ் வெல்டிங் (Gas Welding)
   அ) ஆக்ஸி அசிட்டிலின் வெல்டிங்
   ஆ) ஏர் அசிட்டிலின் வெல்டிங்
   இ) ஆக்சி ஹைட்ரஜன் வெல்டிங்
3. வெல்டிங் தொடர்பான செயல்முறைகள் (Welding Related processes)
   அ) ஆக்சி அசிட்டிலின் கட்டிங்
   ஆ) ஆர்க் கட்டிங்
   இ) ஹார்டு ஃபேசிங்
   ஈ) பிரேசிங்
   உ) சால்டரிங்



7.4 ஆர்க் வெல்டிங் (Arc welding)

ஒரே மாதிரியான உலோகங்கங்களின் முனைகளை ஆர்க் மூலம் உருகவைத்து இணைக்கும் முறைக்கு ஆர்க் வெல்டிங்

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 120 2/1/2023 1:31:36 PM

என்று பெயர். இதில் மின்னாற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப்படுகிறது. இம்முறையில் வெல்டிங் செய்ய எலக்ராடு பயன்படுத்தப்படுகிறது. இணைக்க வேண்டிய உலோகங்களின் அருகில் எலக்ட்ராடை வைத்து பிறகு இரண்டிற்கும் மின்சாரத்தைச் செலுத்தும் போது எலக்ட்ராடுக்கும் பணிப்பொருளுக்கும் இடையே ஆர்க் உருவாகிறது. அவ்வாறு உருவாகும் ஆர்க் அதிக வெப்பத்தை உண்டாக்கி உலோகங்களை உருக்கி இணைக்கிறது.

வெல்டிங் செய்யும் போது எலக்ட்ராடுக்கும், பணிப்பொருளுக்கும் இடையே மூன்று மில்லி மீட்டர் வரை இடைவெளி இருக்க வேண்டும். ஆர்க்மூலம் பணிப்பொருள் உருகுகிறது. எலக்ட்ராடும் உருகுகிறது ஆகையால் இரண்டாக இருக்கும் பணிப்பொருள் எந்தவித அழுத்தமும் கொடுக்கப்படாமல் ஒன்றாக இணைக்கப்படுகிறது. ஆர்க் மூலம் ஏற்படும் வெப்பம் சுமார் 5000°c – யிலிருந்து 6000°c வரை இருக்கும்.

எலக்ட்ராடுகளும் இணைக்க வேண்டிய உலோகங்களும் மின்சாரத்தைச் செலுத்த ஜெனரேட்டர் அல்லது டிரான்ஸ் ஃபார்மர் பயன்படுத்தப்படுகிறது. இதில் பயன்படும் எலக்ட்ராடில் ஃபிளக்ஸ் பூச்சு பூசப்பட்டு இருக்கும். உருகிய உலோகமானது காற்று மண்டலத்துடன் வினை புரிவதை ஃபிளக்ஸ் தடுக்கிறது.



ஆர்க் வெல்டிங் (Arc welding)

7.4.1 ஆர்க் வெல்டிங் உபகரணங்கள் (Arc welding equipments)

ஆர்க் வெல்டிங் செய்ய கீழ்க்கண்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படுகிறது.



ஆர்க் வெல்டிங் உபகரணங்கள்

1. வெல்டிங் DC ஜெனரேட்டர்
2. AC டிரான்ஸ் ஃபார்மர்
3. இரண்டு கேபிள்கள்
   அ. பணிப்பொருள் கேபிள்
   ஆ. வெல்டிங் ராடு கேபிள்
3. வெல்டிங் ராடு பிடிப்பான்
4. எலக்ட்ராடு
5. கையுறை
6. பாதுகாப்புக் கவசம்
7. ஏப்ரான்
8. கம்பி பிரஷ்
9. தட்டும் சுத்தியல்
10. பாதுகாப்புக் கண்ணாடி

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 121 2/1/2023 1:31:36 PM

7.4.2 வெல்டிங் எலக்ட்ராடுகளைக் குறிப்பிடுதல் (Specification of Electrodes)

வெல்டிங் எலக்ட்ராடுகளின் அளவுகள், அவற்றின் சுற்றளவு மற்றும் நீளத்தை வைத்து குறிக்கப்படுகின்றன. அதிகபட்சமாக 12 m.m சுற்றளவு வரையிலும் 450 m.m நீளம் வரையிலும் உள்ள எலக்ட்ராடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

கையினால் வெல்டிங் செய்ய பயன்படும் எலக்ட்ராடுகளின் சுற்றளவு பணிப் பொருட்களின் தடிமனைப் பொறுத்து அதிகரிக்கும். அதிக மின்சாரத்தை உபயோகிக்கும் போது எலக்ட்ராடுகளின் அளவும் அதிகரிக்கும். தானியங்கி முறையில் வெல்டிங் செய்யும் போது எலக்ட்ராடுகளின் அளவும் அதிகரிக்கும். தானியங்கி முறையில் வெல்டிங் செய்யும் போது கம்பிச்சுருள் (Spring) போல் உள்ள எலக்ட்ராடுகள் பயன்படுத்தப்படுகிறது.



7.4.3 எலக்ட்ராடுகளின் வகைகள் (Types of Electrodes)

ஆர்க் வெல்டிங் செய்யப் பயன்படும் எலக்ட்ராடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. தீர்ந்து விடும் வகை எலக்ட்ராடுகள்
2. தீராத வகை எலக்ட்ராடுகள்

தீர்ந்து விடும் எலக்ட்ராடுகள் மூன்று வகைப்படும்.

1. மேல் பூச்சற்ற எலக்ட்ராடுகள்
2. மெல்லிய பூச்சு கொண்ட எலக்ட்ராடுகள்
3. கனமான பூச்சு கொண்ட எலக்ட்ராடுகள்

தீராத வகை எலக்ட்ராடுகள் அடாமிக் ஹைட்ரஜன் வெல்டிங் மற்றும் TIG வெல்டிங் செய்யும் போது பயன்படுத்தப்படுகிறது.

7.4.4 எலக்ட்ராடுகளைத் தேர்ந்தெடுத்தல் (Selecting Electrodes)

எலக்ட்ராடுகள் செய்ய பயன்படும் உலோகங்கள் வெல்டிங் செய்யப்பட வேண்டிய உலோகங்களைப் பொறுத்து அமையும். பல வகையான உலோகங்களை வெல்டிங் செய்ய பயன்படும் எலக்ட்ராடுகள் எந்தெந்த உலோகத்தால் செய்யப்படுகிறது என்ற பட்டியலை கீழே காண்போம்.

பணிப்பொருளின் உலோகம்	எலக்ட்ராடின் உலோகம்
ராட் அயான்	குறைந்த கரி கொண்ட எஃகு
மென்மையான எஃகு	செம்பு பூசப்பட்ட மென்மையான எஃகு கம்பி
கலவை எஃகு	நிக்கல் எஃகு கம்பி
வார்ப்பிரும்பு	வார்ப்பிரும்பு கம்பி
அலுமினியம்	வார்ப்பு அலுமினியம் கலவை கம்பி
கரி கொண்ட எஃகு	எஃகு கம்பி (0.15% கரி மற்றும் 0.025% பாஸ்பரஸ் மற்றும் சல்பர்)
செம்பு	செம்பு கம்பி
பித்தளை	பித்தளை கம்பி

7.5 கேஸ் வெல்டிங் (Gas Welding)

கேஸ் வெல்டிங் என்பது கேஸ் மூலம் உண்டாக்கப்படும் தீச்சுடரைக் கொண்டு உலோகங்களை உருக்கி இணைக்கும் செயலாகும். கேஸ் வெல்டிங் செய்யும் போது அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை. ஆக்சிஜன் மற்றும் அசிட்டிலின் ஆகிய இரண்டையும் வெல்டிங் டார்ச் மூலம் செலுத்தி அதனை எரிய வைப்பதால் தீச்சுடர் உருவாகிறது. இந்த தீச்சுடர் உலோகங்களை உருக்க மட்டுமே பயன்படும். வெல்டிங் டார்ச் மூலம் ஆக்ஸிஜன் மற்றும் அசிட்டிலின் கலவை விகிதம் சரிசெய்து கொள்ளப்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 122 2/1/2023 1:31:36 PM

www.tnschoolbooks.in

உலோகங்களை இணைப்பதற்கு தேவையான அதிகப்படியான உலோகத்தை ஃபில்லர் ராடு மூலம் வெல்டிங்கில் சேர்க்கலாம். ஒரு ஃபிளக்ஸ் மூலம், ஆக்ஸைடு ஏற்படாமல் தடுத்து அசுத்தங்கள் அகற்றப்படுகிறது. இந்த வகை வெல்டிங்கில் ஏற்படும் தீச்சுடரின் வெப்பம் 3200°C வரை இருக்கும்.



கேஸ் வெல்டிங் (Gas Welding)

கேஸ் வெல்டிங் சாதனங்கள் (Gas welding Equipments)

கேஸ் வெல்டிங் செய்ய கீழ்கண்ட சாதனங்கள் முக்கியமானவையாகும்.

1. கேஸ் சிலிண்டர்கள்
2. ரெகுலேட்டர்கள்
3. அழுத்தமானிகள்
4. இரப்பர் குழாய்கள்
5. வெல்டிங் டார்ச்
6. பாதுகாப்புக் கண்ணாடி
7. கையுறை
8. பற்றவைப்பான்
9. கம்பி பிரஷ்

கேஸ் சிலிண்டர் (Gas Cylinder)

கேஸ் சிலிண்டர் (Gas Cylinder)

கேஸ் வெல்டிங் செய்வதற்கு, ஆக்சிஜன் மற்றும் அசிட்டிலின் ஆகியவை தனித்தனியாக இரண்டு சிலிண்டர்களில் வைக்கப்பட்டு பயன்படுத்தப்படும். ஆக்சிஜன் சிலிண்டர் கருப்பு நிறத்திலும் அசிட்டிலின் சிலிண்டர் மெரூன் நிறத்திலும் இருக்கும். சிலிண்டரில் ஆக்சிஜன் வாயுவின் அழுத்தம் 125 kg/Cm2 இருக்கும். அசிட்டிலின் வாயு சிலிண்டரில் 16kg/Cm2 அழுத்தத்தில் அடைக்கப்பட்டிருக்கும்.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 123 2/1/2023 1:31:36 PM

www.tnschoolbooks.in

ரெகுலேட்டர்கள் (Regulators)

இரண்டு சிலிண்டரிலும் தனித்தனியாக ரெகுலேட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கும். வெல்டிங் செய்யும் போது தேவைக்கேற்ப கேஸ்களின் அழுத்தத்தை மாற்றிக்கொள்ள ரெகுலேட்டர்கள் பயன்படுத்தப்படுகிறது. ஆக்சிஜன் 1Kg/cm2 அழுத்தத்திலும் அசிட்டிலின் 0.15kg/cm2 அழுத்தத்திலும் பயன்படுத்தப்படுகிறது. வெல்டிங் செய்யப்படும் உலோகங்களின் தடிமனைப் பொறுத்து இந்த அழுத்தங்கள் மாறுபடும்.

ரெகுலேட்டர்கள் (Regulators)

அழுத்தமானிகள் (Pressure gauges)

ஆக்சிஜன் சிலிண்டரில் இரண்டு அழுத்தமானிகளும், அசிட்டிலின் சிலிண்டரில் இரண்டு அழுத்தமானிகளும் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றில் ஒரு அழுத்தமானியின் மூலம் சிலிண்டரின் அழுத்தத்தையும் மற்றொரு அழுத்தமானியின் மூலம் கேஸ் வெளியேறும் அழுத்தத்தையும் கண்டறியலாம்.

இரப்பர் குழாய்கள் (Hose pipes)

ஆக்ஸிஜன் சிலிண்டரிலிருந்து கருப்பு நிறத்தில் ஒரு நீளமான இரப்பர் குழாயும் அசிட்டிலின் சிலிண்டரிலிருந்து சிவப்பு நிறத்தில் ஒரு நீளமான இரப்பர் குழாயும், ரெகுலேட்டர் வழியாக பொருத்தப்பட்டிருக்கும். இந்த குழாய்கள் ரெகுலேட்டரிலிருந்து வெல்டிங் டார்ச்சிற்கு கேஸை கொண்டு செல்கிறது.

ஆக்ஸிஜன் குழாய்

அசிட்டிலின்குழாய்

வெல்டிங் டார்ச் (Welding Torch)

தனித்தனி சிலிண்டரிலிருந்து ஆக்ஸிஜனும், அசிட்டிலினும் தனித்தனி இரப்பர் குழாய்கள் மூலம் வெல்டிங் டார்ச்சை அடைகின்றன. இரண்டு கேஸ்களும் வெல்டிங் டார்ச் கலக்கும் பகுதியில் ஒன்றாக கலக்கின்றன. இது வால்வு வழியே வெளியேறும் போது தானியங்கி பற்ற வைப்பான் மூலம் தீச்சுடர் ஏற்படுகிறது. இந்த வெல்டிங் டார்ச்சில் இரண்டு கட்டுப்பாட்டு வால்வுகள் உள்ளன. இவற்றை பயன்படுத்தி ஆக்ஸிஜன் மற்றும் அசிட்டிலின் அளவுகளைக் கட்டுப்படுத்தி தீச்சுடரின் தரத்தை கூட்டவோ, குறைக்கவோ, செய்யலாம். வெல்டிங் டார்ச்சை வெல்டிங் செய்ய பயன்படும்

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 124 2/1/2023 1:31:37 PM

உலோகங்களின் தடிமனுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளலாம்.



வெல்டிங் டார்ச் (Welding Torch)

பாதுகாப்புக் கண்ணாடி (Goggles

பாதுகாப்புக் கண்ணாடி (Goggles)

தீச்சுடலிருந்து வரும் வெப்பம் மூலம் அதிக சிவப்பு மற்றும் புற ஊதா கதிர்கள் வெளியாகிறது. அவற்றிலிருந்து கண்களுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க பாதுகாப்புக் கண்ணாடிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கையுறை (Welding Gloves)

கையுறை (Gloves)

வெப்பம் மற்றும் உருகிய உலோகங்களின் சிறிய சிதறல்களினால் கைகளுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுக்க கையுறைகள் பயன்படுகிறது.

பற்றவைப்பான் (Spark Lighter)

ஆக்சிஜன் மற்றும் அசிட்டிலின் கேஸ் கலவையைப் பற்ற வைக்க பற்றவைப்பான்கள் பயன்படுகிறது.

பற்றவைப்பான் (Spark Lighter)

கம்பி பிரஷ் (Wire brush)

வெல்டிங் செய்வதற்கு முன்னும், பின்னும் வெல்டிங் செய்யுமிடத்தை சுத்தம் செய்ய கம்பி பிரஷ் பயன்படுகிறது.

7.5.1 தீச்சுடரின் வகைகள் (Types of Flames)

ஆக்சிஜன் மற்றும் அசிட்டிலின் அளவை கட்டுப்படுத்தப்படுவதன் மூலம் தீச்சுடரின் அளவை குறைக்கவோ, அதிகப்படுத்தவோ செய்யலாம். ஆக்சிஜன், அசிட்டிலின் விகிதத்தை மாற்றும்போது கீழ்கண்ட மூன்று வகையான தீச்சுடர் கிடைக்கிறது.

1. நடுநிலை தீச்சுடர்
2. ஆக்சிடைசிங் தீச்சுடர்
3. கார்புரைசிங் தீச்சுடர்



நடுநிலைத் தீச்சுடர் (Neutral Flame)

இந்த தீச்சுடரில் ஆக்சிஜனும், அசிட்டிலினும் சம அளவில் இருக்கும். 3200°c வரை வெப்பம் உருவாகும். இந்த தீச்சுடரில் இரண்டு பகுதிகள் உள்ளன. கூர்மையான பிரகாசமாக உள்ள பகுதி உள் கூம்பு பகுதி எனப்படும். மற்றொன்று நீல நிறத்தில்

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 125 2/1/2023 1:31:38 PM

உள்ள பகுதி வெளி கூம்பு பகுதி ஆகும். இந்த நடுநிலை தீச்சுடரின் வெல்டிங் செயலுக்கு அதிகமாக பயன்படுத்தப்படும். ஏனெனில் இது சூடான உலோகத்தில் எவ்வித இராசயன மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

ஆக்சிடைசிங் தீச்சுடர் (Oxidizing Flame)

இதில் அசிட்டிலினை விட ஆக்சிஜன் அதிகமாக இருக்கும். இதில் இரண்டு பகுதிகள் உள்ளன.

1. பிரகாசமான உட்புற கூம்பு
2. வெளிப்பக்க கூம்பு

இந்த வகை தீச்சுடர் வெண்கலம், பித்தளை ஆகிய உலோகங்களை வெல்டிங் செய்ய பயன்படுகிறது.

கார்புரைசிங் தீச்சுடர் (Carburizing Flame)

இதற்கு குறைக்கும் தீச்சுடர் என்று பெயர். இதில் ஆக்சிஜனைவிட அசிட்டிலின் அதிகமாக இருக்கும். இத்தீச்சுடரில் மூன்று பகுதிகள் உள்ளன.

1. கூர்மையான உட்புற கூம்பு
2. வெள்ளை நிற நடுநிலை கூம்பு
3. நீல நிற வெளிப்புற கூம்பு

கார்புரைசிங் தீச்சுடர் குறைவான கார்பன் கொண்ட எஃகு, மற்றும் உலோக கலவைகள் ஆகியவற்றை வெல்டிங் செய்யவும், உலோக பணிப்பொருட்களின் வெளிப்பரப்பை கடினமாக்கும் செயலுக்கும் இத்தீச்சுடர் பயன்படுத்தப்படுகிறது.

7.5.2 கேஸ் வெல்டிங்கிற்கு பயன்படும் நிரப்பு கம்பிகள் (Filler rods used in gas welding)

நிரப்பு கம்பி என்பது கேஸ் வெல்டிங்கின்போது இணைப்பிற்குத் தேவையான கூடுதல் உலோகத்தை அளிக்க பயன்படும் உலோக கம்பியை குறிக்கும். இக்கம்பி தீச்சுடரால் உருக்கப்பட்டு வெல்டிங் செய்யும் உலோகத்தின் மீது படியவைக்கப்படுகிறது. நிரப்பு கம்பி மூலம் செய்யப்படும் உலோகம், வெல்டிங் செய்யப்படும் உலோகத்தைப் பொறுத்து அமையும். நிரப்பு கம்பியின் விட்டம் பணிப்பொருளின் தடிமனைப் பொறுத்து அமையும். குரோமியம், நிக்கல் போன்ற உலோக கலவைகளை இந்த நிரப்பு கம்பிகளில் சேர்க்கலாம். இதனால் இணைப்பின் பலம் அதிகப்படுத்தப்படுகிறது. நிரப்பு கம்பிகளுக்கு செம்பு உலோகத்தால் மெல்லிய பூச்சு கொடுக்கப்பட்டிருக்கும். இது சூடான உலோகம் ஆக்சிஜனுடன் கலப்பதை தடுக்கிறது. ஃபிளக்சை பவுடர் வடிவத்திலோ அல்லது திரவ வடிவத்திலோ பயன்படுத்தலாம்.

7.5.3 கேஸ் வெல்டிங்கின் நிறைகள் (Advantages of Gas welding)

1. இந்த வெல்டிங் பலவகை வேலைகளுக்குப் பயன்படுகிறது.
2. வெல்டிங்கிற்குத் தேவைப்படும் வெப்ப அளவை எளிதில் கட்டுப்படுத்தலாம்.
3. நிரப்பு உலோகம் சேர்க்கப்படும் அளவையும், எளிதில் கட்டுப்படுத்தலாம்.
4. கேஸ் வெல்டிங் சாதனத்தின் விலை குறைவு.
5. பராமரிப்பு செலவு குறைவு.
6. கேஸ் வெல்டிங் செய்ய பயன்படும் சாதனங்களை தீச்சுடர் கொண்டு உலோகங்களை வெட்டுதல், பிரேசிங் ஆகிய செயல்களுக்குப் பயன்படுத்தலாம்.

7.5.4 கேஸ் வெல்டிங்கின் குறைபாடுகள் (Disadvantages of Gas welding)

1. கனமான பொருட்களை இணைக்கப் பயன்படுகிறது.
2. மிகவும் மெதுவாக வேலை செய்ய முடியும்.
3. மின்சார ஆர்க்கை விட கேஸ் தீச்சுடர் உலோகத்தை வெப்பப்படுத்த அதிக நேரம் எடுத்துக் கொள்ளும்.
4. இணைப்பின் பலம் குறைவு.
5. கேஸ் சிலிண்டர்களைக் கையாளவும், பாதுகாப்பாக வைக்கவும். அதிக கவனம் செலுத்த வேண்டும்.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 126 2/1/2023 1:31:38 PM

7.6 ஆர்க் வெல்டிங், கேஸ் வெல்டிங் வேறுபாடுகள் (Difference Between Arc welding and Gas welding

ஆர்க் வெல்டிங்	கேஸ் வெல்டிங்
மின்சார ஆர்க் மூலம் வெப்பம் உண்டாக்கப்படும்.	கேஸ் தேவையான வெப்பத்தைக் கொடுக்கிறது.
ஆர்க்கின் வெப்ப அளவு 5000°C – 6000°C	கேஸ் தீச்சுடரின் வெப்ப அளவு சுமார் 3200°C
இதில் நிரப்பு கம்பி எலக்ட்ராடாகவும் பயன்படுத்தப்படுகிறது.	இதில் நிரப்பு கம்பியை தனியாக பயன்படுத்த வேண்டும்.
மின்சாரத்தினால் அபாயம் உள்ளது.	அழுத்தப்பட்ட கேஸ் மூலம் அபாயம் உள்ளது.
இணைப்புகள் அதிக உறுதி கொண்டது.	இணைப்புகள் அதிக உறுதி கிடையாது.
மின்சார ஆர்க்மூலம் பிரேசிங் சால்டரிங் செய்ய முடியாது.	கேஸ் தீச்சுடர் கொண்டு பிரேசிங் சால்டரிங் செய்ய முடியும்.
நிரப்பு உலோகமும், பணிப்பொருளும் ஒரே உலோகமாக இருக்க வேண்டும்.	நிரப்பு கம்பி, பணிப்பொருளை தவிர வேறு உலோகமாக இருக்கலாம்.
இது அழுத்தம் பயன்படுத்தாமல் செய்யப்படும் உருகு நிலை வெல்டிங் முறையாகும்.	இதுவும் அழுத்தம் பயன்படுத்தாமல் செய்யப்படும் உருகு நிலை வெல்டிங் முறையாகும்.

7.7 வெல்டிங் சார்ந்த செயல் முறைகள் (Welding Related processes)

வெல்டிங் சார்ந்த செயல்முறைகளில் கீழ்க்கண்டவைகள் முக்கியமானதாக கருதப்பட்டு தொழிற்சாலைகளில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

1. ஆக்சி அசிட்டிலின் கட்டிங்
2. ஆர்க் கட்டிங்
3. ஹார்டு ஃபேசிங்
4. சால்டரிங்
5. பிரேசிங்

ஆக்சி அசிட்டிலின் கட்டிங் (Oxy – Acetylene Cutting)



ஆக்சி அசிட்டிலின் கட்டிங் (Oxy – Acetylene Cutting)

இரும்பு எஃகு ஆகிய உலோகங்களை ஒரு தனிப்பட்ட ஆக்ஸிஜன், அசிட்டிலின் டார்ச் கொண்டு வெட்டி எடுக்கலாம். ஆக்ஸிஜனும், அசிட்டிலினும் ஒன்றாக கலக்கப்பட்டு வெல்டிங் டார்ச்சில் உள்ள சிறிய துளையின் வழியாக தீச்சுடரை செலுத்தி உலோகத்தை வெட்பமடையச் செய்து பழுத்த நிலைக்கு கொண்டு வரப்படுகிறது. பிறகு வெல்டிங் டார்ச் மத்தியில் உள்ள துளை வழியாக ஆக்ஸிஜனை சிவந்த நிலையில் உள்ள உலோகத்தின் மீது அதிக அழுத்தத்துடன் செலுத்தும் போது உலோகம் வெட்டப்படுகிறது. இவ்வாறு ஆக்சி அசிட்டிலின் மூலம் இரும்பு மற்றும் எஃகு உலோகங்களை வெட்டி எடுக்கலாம்.

ஆர்க் கட்டிங் (Arc Cutting)

கார்பன் எலக்ட்ராடு அல்லது உலோக எலக்ட்ராடு மூலம் உலோகத்தை உருகச் செய்து அதிக அழுத்தம் உள்ள காற்றை செலுத்துவதன் மூலம் உருகிய உலோகம்

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 127 2/1/2023 1:31:38 PM

வெளியேற்றப்பட்டு பணிப்பொருள் வெட்டி எடுக்கப்படுகிறது. காற்றிற்கு பதிலாக ஆக்சி ஆர்க் மூலம் அதிக அழுத்தத்தில் ஆக்சிஜனை எலக்ட்ராடுடன் செலுத்தி உலோகத்தை வெட்டி எடுக்கலாம். ஆர்க் கட்டிங் மூலம் துல்லியமான அளவிற்கு வெட்ட முடியாது.

ஹார்டு பேசிங் (Hard facing)

கடினமான உலோகத்தை மிருதுவான உலோகத்தின் மீது படிய வைப்பதே ஹார்டு ஃபேசிங் எனப்படும். படிய வைக்கப்பட்ட உலோகத்தை நன்றாக தூளாக்கி வெல்டிங் துப்பாக்கியில் நிரப்பிக்கொள்ள வேண்டும். ஆக்சி அசிட்டிலின் மூலம் தீச்சுடர் உருவாக்கப்பட்டு தூளான நிலையில் உள்ள உலோக துகள்களை உருக வைத்து அதன் மீது மந்த வாயுவை அதிக அழுத்தத்தில் செலுத்தி உருகிய உலோக துகள்கள் சிறு, சிறு துகள்களாக பணிப்பொருள் மீது படிய வைக்கப்படுகிறது.



ஹார்டு பேசிங் (Hard facing)

இம்முறையில், வெட்டுளிகளின் மீதும், வெட்டுக்கருவிகளின் மீதும் வெட்டுக்கருவிகள், டங்க்ஸ்டன் கார்பைடு, குரோமியம் கார்பைடு அல்லது அலுமினியம் ஆக்சைடு போன்ற உலோகங்களால் பூச்சுக்களை படியவைக்க முடியும்.

சால்டரிங் (Soldering)

ஒரே மாதிரியான அல்லது வெவ்வேறு உலோகங்களை குறைந்த உருகுநிலை கொண்ட சால்டர் மூலம் இணைப்பதே சால்டரிங் எனப்படும். சால்டர் என்பது டின் மற்றும் காரீயம் கலந்த உலோகம் ஆகும். குறைந்த வெப்ப நிலையில் சால்டர் உருகும் தன்மை கொண்டது. இணைக்கப்பட வேண்டிய உலோகங்களின் பரப்புகளை நன்றாக சுத்தம் செய்து பிறகு சரியான நிலையில் வைத்து அதன்மேல் துத்தநாக குளோரைடு சால்டரிங் மூலம் தடவப்படுகிறது. துத்தநாக குளோரைடு இங்கு ஃபிளக்ஸாக செயல்படுகிறது. இதன் மூலம் ஆக்சிஜன் வினை நடைபெறுவதை தடுக்கலாம். அவ்வாறு நிரப்பியவுடன் சால்டர் திட நிலைக்கு மாறி பணிப்பொருட்களை இணைக்கிறது.



சால்டரிங் (Soldering)

பிரேசிங் (Brazing)

நிரப்பு உலோகங்களை இரண்டு உலோக துண்டுகளுக்கிடையே நிரப்பி இணைப்பதே பிரேசிங் ஆகும். இதில் 450°C–க்கு நிரப்பு உலோகத்தைப் வெப்பப்படுத்த வேண்டும். இணைக்கப்பட வேண்டிய பணிப்பொருளை உருக வைக்காமல் நிரப்பு உலோகம் மூலம் பணிப்பொருட்கள் இணைக்கப்பட வேண்டிய பகுதியை நன்றாக சுத்தம் செய்த பிறகு திரவ நிலையில் உள்ள நிரப்பு உலோகத்தைக் கொண்டு உலோகத்தை நிரப்பி பணிப்பொருட்கள் இணைக்கப்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 128 2/1/2023 1:31:38 PM

www.tnschoolbooks.in



பிரேசிங் (Brazing)

7.8 வெல்டிங் இணைப்புகளின் வகைகள் (Type of welding Joints)

1. பட் இணைப்பு
2. லேப் இணைப்பு
3. T – இணைப்பு
4. மூலை இணைப்பு
5. ஃபிளான்ஞ் இணைப்பு

பட் இணைப்பு (Butt Joint)

இந்த இணைப்பின் மூலம் இரண்டு தகடுகள் அல்லது உலோகங்களின் முனைகள் அல்லது விளிம்புகளை ஒன்றாக இணைக்கலாம். தகடுகளையோ அல்லது உலோகங்களையோ ஒரே சம தளத்தில் வைத்து இணைக்க வேண்டும் 5.mm தடிமன் உள்ள தகடுகளின் முனைகளை அப்படியே இணைக்கலாம் 5.mm க்கு மேல் தடிமனுள்ள தகடுகளின் முனைகளை அதற்கு தக்கவாறு வடிவமைத்து பின்னர் இணைக்க வேண்டும்.



வெல்டிங் இணைப்புகளின் வகைகள்
(Type of welding Joints)

லேப் இணைப்பு (Lap Joint)

உலோக தகடுகளை ஒன்றின் மீது ஒன்று படிய வைத்து இணைக்கப்படும் முறையாகும். ஒரு தகட்டின் முனை மற்ற தகட்டின் பரப்பின் மீது வெல்டிங் செய்யப்படுகிறது. இதில் ஒற்றை மடி இணைப்பு, இரட்டை மடி இணைப்பு என்று இரண்டு வகை இணைப்புகள் உண்டு.

T – இணைப்பு (T– Joint)

இவ்வகை இணைப்பு 90° கோணத்தில் உள்ள தகடுகளை இணைக்க பயன்படுகிறது. கனமான தகடுகளையும் T – வடிவ இணைப்பில் இணைக்கலாம்.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 129 2/1/2023 1:31:38 PM

மூலை இணைப்பு (Corner Joint)

இவ்வகை இணைப்பில் இரண்டு தகடுகள் 90° கோணத்தில் இணைக்கப்படுகிறது. பெட்டிகள், தொட்டிகள் ஆகியவை தயாரிக்கும்போது இவ்வகை இணைப்புகள் பயன்படுத்தப்படுகிறது. மெல்லிய மற்றும் கனமான தகடுகளில் இவ்வகை இணைப்புகளைச் செய்யலாம்.

ஃபிளான்ஞ் இணைப்பு (Flange Joint)

இவ்வகை இணைப்பில் இரண்டு தகடுகள் 90° கோணத்தில் இணைக்கப்படுகிறது. அல்லது இணையாக வைத்து இணைக்கப்படுகிறது. தகடுகளின் முனைகள் ஃபிளான்ஞ் போன்ற அமைப்பை உண்டாக்கும்படியாக வைத்து செய்யலாம்.

7.9 பாதுகாப்பு குறிப்புகள்

வெல்டிங் செய்யும்போது மின்சார உபகரணங்களையும் எளிதில் தீப்பற்றக்கூடிய ஆக்சிஜன் மற்றும் அசிட்டிலின் ஆகியவற்றை பயன்படுத்துகிறோம். கவனக்குறைவாக செயல்பட்டால் விபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே வெல்டிங் செய்யும்போது தேவையான பாதுகாப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டும்.

ஆர்க் வெல்டிங் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள் (Safty precautrons for Arc welding)

1. கண் கண்ணாடி, கையுறை, ஏப்ரான், காலணி ஆகியவற்றை பணியாளர்கள் பயன்படுத்த வேண்டும்.
2. வெல்டிங் செய்யப்படும் இடம் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மறைக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. மின்சாரம் தாக்குவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.
4. எலக்ட்ராடு பிடிப்பான் தரமுடையதாகவும், நல்ல மின்தடை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.
5. தேவையான மின்னழுத்தம் மற்றும் சீரான மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.
6. முதலுதவி சாதனங்கள், தீயணைப்பு சாதனங்களை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும்.

கேஸ் வெல்டிங் செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்புக் குறிப்புகள் (Safety precautions for Gas welding)

1. சிலிண்டர்களை காற்றோட்டமான இடத்தில் வைக்க வேண்டும்.
2. வெப்பமான இடம், மின்சார இணைப்பு இருக்கும் இடங்களில் சிலிண்டர்களை வைக்கக் கூடாது.
3. வெல்டிங் செய்து முடித்தவுடன் சிலிண்டர் வால்வுகளை உடனடியாக மூடிவிட வேண்டும்.
4. வால்வுகளை வேகமாக திறக்கக் கூடாது.
5. பழுதான நிலையில் உள்ள அழுத்த வால்வுகளை அகற்றி புதிய வால்வுகளை இணைக்க வேண்டும்.
6. கண் கண்ணாடி, கையுறை, ஏப்ரான், காலணி போன்றவற்றை உபயோகிக்க வேண்டும்.
7. தீயணைப்பு சாதனங்கள் மற்றும் முதலுதவிப் பெட்டி ஆகியவை பணிமனையில் தயாராக இருக்க வேண்டும்.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 130 2/1/2023 1:31:39 PM

செயல்பாடுகள்

- வெல்டிங் பணிமனைக்கு சென்று எவ்வாறு செய்யப்படுகிறது மற்றும் பல்வேறு வெல்டிங் இணைப்புகள் பற்றி அறிந்து கொண்டு ஏதேனும் இரண்டு வகை வெல்டிங் இணைப்புகளை உலோகப் பொருள் கொண்டு செய்தல்.

வினாக்கள்

பகுதி அ (1 மதிப்பெண்)

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. ஆர்க் வெல்டிங் மூலம் ஏற்படும் வெப்பத்தின் அளவு

   அ. 100°C – 150°C

   ஆ. 50°C – 100° C

   இ. 5000°C – 6000° C

   ஈ. 150°C – 200° C

2. கேஸ் வெல்டிங் செய்ய பயன்படும் கேஸ் சிலிண்டரில் உள்ள அசிட்டிலின் வாயுவின் அழுத்தம்

   அ. 16kg/cm2 ஆ. 125kg/cm2

   இ. 100kg/cm2 ஈ. 14kg/cm2

3. கேஸ் வெல்டிங் செய்ய பயன்படும் கேஸ் சிலிண்டரில் உள்ள ஆக்சிஜன் வாயுவின் அழுத்தம்

   அ. 16kg/cm2

   ஆ. 100kg/cm2

   இ. 125kg/cm2

   ஈ. 14kg/cm2

4. பிளாஸ்டிக் நிலை வெல்டிங் என்பது

   அ. அழுத்த வெல்டிங்

   ஆ. அழுத்தமில்லா வெல்டிங்

   இ. உருகிய வெல்டிங்

   ஈ. ஆர்க் வெல்டிங்

5. உருகிய நிலை வெல்டிங் என்பது

   அ. அழுத்த வெல்டிங்

   ஆ. அழுத்தமில்லா வெல்டிங்

   இ. மின்தடை வெல்டிங்

   ஈ. தெர்மிட் வெல்டிங்

பகுதி ஆ (3 மதிப்பெண்)

ஓரிரு வரிகளில் விடையளி

6. ஆர்க் வெல்டிங் வகைகள் ஏதேனும் மூன்றினை எழுது.
7. கேஸ் வெல்டிங் வகைகள் மூன்றினை எழுது.
8. வெல்டிங் தொடர்பான செயல்முறைகள் மூன்றினை கூறுக.
9. எலக்ட்ராடுகள் அளவு எவ்வாறு குறிப்பிடப்படுகிறது.
10. எலக்ராடுகளின் வகைகளை எழுதுக.
11. கேஸ் வெல்டிங் மூன்று வகை தீச்சுடர்கள் யாவை?
12. வெல்டிங் இணைப்புகள் வகைகளை எழுதுக.

பகுதி இ (5 மதிப்பெண்)

ஒரு பக்க அளவில் விடையளி

13. கேஸ் வெல்டிங் சாதனங்கள் இரண்டினை விளக்குக.
14. தீச்சுடர் ஒன்றின் படம் வரைந்து விளக்குக.

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 131 2/1/2023 1:31:39 PM

15. கேஸ் வெல்டிங் நிறைகளை கூறுக.
16. ஆக்சி அசிட்டிலின் கட்டிங் படம் வரைந்து விளக்குக.
17. ஹார்டு பேசிங் படம் வரைந்து விளக்குக.
18. சால்டரிங் படம் வரைந்து விளக்குக.

பகுதி ஈ (10 மதிப்பெண்)

விரிவான விடையளி

19. ஆர்க் வெல்டிங் செயல்முறையினை படத்துடன் விவரி.
20. ஆர்க் வெல்டிங் உபகரணங்கள் படத்துடன் பட்டியலிடுக.
21. கேஸ் வெல்டிங் பற்றி விளக்கு.
22. ஆர்க் வெல்டிங், கேஸ் வெல்டிங் வேறுபாடுகளை கூறுக.
23. கேஸ் வெல்டிங், ஆர்க் வெல்டிங் செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள் யாவை?

XII BME_Tamil version CHAPTER 07-2023.indd 132 2/1/2023 1:31:39 PM

www.tnschoolbooks.in

சி.என்.சி. இயந்திரம் (CNC Machine)

கற்றலின் நோக்கம்

- 'எண்ணுருக் கட்டுப்பாடு' குறித்தும் அவை எவ்வாறு இயந்திரங்களை கட்டுப்படுத்துகிறது என்பது பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்.
- பிறகு 'கணினி எண்ணுருக் கட்டுப்பாடு' குறித்தும் அவற்றின் கூறுகளையும் (Elements), கூறுகளின் செயல்பாடுகளையும் மாணவர்கள் தெரிந்து கொள்ளுதல்.
- கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரங்களின் வகைகள் பற்றி விரிவாக அறிந்து கொள்ளுதல்.
- கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரத்திற்கான திட்ட செயல்பாடு (Programme) பற்றி தெரிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

8.1 அறிமுகம்
8.2 எண்ணுருக் கட்டுப்பாடு
8.3 கணினி எண்ணுருக் கட்டுப்பாடு
8.4 கணினி எண்ணுரு கட்டுப்பாட்டு இயந்திரத்தின் கூறுகள்
8.5 மென்பொருள்
8.6 உள்ளீட்டு ஊடகம்
8.7 இயந்திரக் கட்டுப்பாட்டு அலகு
8.8 இயக்கும் கருவிகள்
8.9 இயந்திரக் கருவி
8.10 CNC இயந்திரங்களின் வகைகள்
8.11 பொதுவான இயந்திரங்களைக் காட்டிலும், கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரங்களின் நிறைகள் மற்றும் குறைகள்
8.12 கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரத்திற்கும், பொதுவான இயந்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள்
8.13 CNC இயந்திரத்திற்கான திட்ட செயல்பாடு
8.14 CNC இயந்திரங்களின் வளர்ச்சி

8.1 அறிமுகம்

தொழிற்சாலைகளில் தயாரிப்பு பணி என்பது மூலப்பொருட்களில் இருந்து நமக்கு தேவையான பாகங்களை உருவாக்குவதாகும். இந்த பணி பல்வேறு மூலப்பொருட்கள், வெட்டுளிகள், மற்றும் இயந்திர கருவிகளின் உதவியுடன் மனிதனால் செய்து முடிக்கப்படுகிறது. இயந்திரப் பணி மூலம் தயாரிப்பு வேலையைச் செய்து முடிப்பதற்கு குறிப்பிட்ட சில தகவல்களும், சக்தியும் தேவைப்படுகிறது. காலப்போக்கில் இப்பணியில் பல்வேறு முறைகளும், வெவ்வேறு தொழில் நுட்பங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 133 2/1/2023 1:32:57 PM

உங்களுக்குத் தெரியுமா?

CNC இயந்திரங்கள் கண்டுபிடிப்பதற்கு முன்பு எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரங்களே (Numerical Controlled Machines) பயன்பாட்டில் இருந்தன. இந்த எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரம் 1940 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப கல்லூரியில் பணி புரிந்த ஜான் டி.பார்சன்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வியந்திரம் கணினி (computer) மூலம் இயங்குவதால் CNC இயந்திரம் என அழைக்கப்படுகிறது.

பயன்படுத்தப்பட்டுள்ளன. தயாரிப்பு பணியில் நவீன யுக்திகள் கையாளப்படுகையில் அதில் மனிதனின் பங்களிப்பு மிகவும் குறைந்து அப்பணிக்குத் தேவையான சக்தியையும், விவரங்களையும் இயந்திரங்களே தரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இயந்திரங்களை மனிதன் கட்டுப்படுத்திய காலம் மாறி, தற்போது அவற்றிற்கு தேவையான கட்டுப்பாடுகளை, வெவ்வேறு ஆணை நிரல்கள் (Programme) மூலம் தரப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே குறைந்த பொருட் செலவில், அதிக நுணுக்கத்துடன் அதிக அளவில் உற்பத்தி செய்யும் நிலை உருவாகியுள்ளது.

8.2 எண்ணுருக் கட்டுப்பாடு (Numerical Control)

என்.சி. அமைப்பில் இயந்திரப்பணி செய்ய குறிப்பிட்ட குறியீடுகளைக் கொண்ட செயல் கட்டளைகள் தேவைப்படுகிறது. இதற்கு மனிதனின் பங்களிப்பு தேவைப்படுகிறது. இச்செயலை பாகத்திற்கான திட்ட செயல்பாடுகள் (PART PROGRAMME) என்கிறோம். இந்த திட்ட செயல்பாடுகள்

சி.என்.சி கடைசல் இயந்திரம்

உள்ளீட்டு ஊடகங்களான அட்டைகளிலும், நாடாக்களிலும் சேமித்து வைக்கப்படுகின்றன. இத்தகைய உள்ளீட்டு ஊடகங்களிலிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு, இயந்திரக் கருவிகள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் பணிகளைச் செய்து முடிக்கின்றன.

பல்வேறு எண்ணுரு தரவுகளைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் கட்டளைகளைக் கொண்டு ஓர் இயந்திரக் கருவியின் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதே "எண்ணுருக் கட்டுப்பாடு" ஆகும்.

8.3 கணினி எண்ணுருக் கட்டுப்பாடு

ஒரு அடிப்படை எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரத்தின் செயல்பாடுகள் கணினி மூலம் நிர்வகிக்கப்படுமானால், அது 'கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரம்' எனப்படும். இதில் உள்ள கணினி ஆணை நிரல்கள், இயந்திரங்களின் பணிகளை செயல்படுத்த பயன்படுகின்றன.

8.4 கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரத்தின் கூறுகள்

ஒரு கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரம் கீழ்க்கண்ட கூறுகளை உள்ளடக்கியது.

1. மென்பொருள்
2. இயந்திரக்கட்டுப்பாட்டு அலகு
3. இயக்கும் கருவிகள்
4. கைக்கட்டுப்பாட்டு அலகு
5. இயந்திரக்கருவி

மேற்கண்ட கூறுகளைக் கொண்டு செய்யப்படும் செயல்பாடுகள் கீழ்க்கண்ட பணிகளைக் கொண்டதாக இருக்கும்.

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 134 2/1/2023 1:32:57 PM

www.tnschoolbooks.in

அ) தயாரிக்கப்பட வேண்டிய பொருளின் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு ஆணை நிரலினை (Programme) உருவாக்குதல்.

ஆ) உள்ளீட்டு ஊடகத்திற்கான தரவுகளை தயாரித்தல்.

இ) கட்டுப்பாட்டு அலகிற்கு தரவுகளை உள்ளீடு செய்தல்.

ஈ) இயந்திரத்தினைக் கொண்டு பொருளை தயாரித்தல்.



8.5 மென்பொருள் (Software)

கணினி எண்ணுருக் கட்டுப்பாட்டு அமைப்பின் மென்பொருள் என்பது இயந்திரம் செயல்படத் தேவையான தொடர்ச்சியான குறிப்புகள் அல்லது ஆணைகள், அவற்றை எழுத உதவும் கணினி மொழிகள், அவற்றை சேமிக்க உதவும் பல்வேறு உள்ளீட்டு ஊடகங்கள் ஆகியவற்றை கொண்டதாகும்.

எண்ணுருக் கட்டுப்பாட்டு கருவிக்கு அளிக்கப்படும் குறிப்புகள் அல்லது ஆணைகள் இரண்டடிமான எண்முறையில் கொடுக்கப்படுகிறது. இம்முறையில் 0 மற்றும் 1 ஆகிய இரண்டு எண்ணுருக்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

8.6 உள்ளீட்டு ஊடகம் (Input Media)

பல்வேறு தகவல்களை சேமித்து வைத்து தேவைப்படும்போது இயந்திரத்தின் கட்டுப்பாட்டு அலகிற்கு அவற்றை அளிக்க கீழ்க்கண்ட வெவ்வேறு உள்ளீட்டு ஊடகங்கள் பயன்படுகின்றன.

1. புள்ளி குத்தப்பட்ட அட்டைகள்
2. புள்ளி குத்தப்பட்ட நாடாக்கள்
3. காந்த விசை நாடாக்கள்
4. பிளாப்பி தட்டுகள்.

புள்ளி குத்தப்பட்ட அட்டைகள், பல்வேறு தரவுகளை, புள்ளி குத்தப்பட்ட துளைகளின் மூலம் சேமிக்க பயன்படுகின்றன. புள்ளி குத்தப்பட்ட நாடாக்கள் என்பது காகிதம், மையிலார் எனப்படும் பிளாஸ்டிக் மற்றும் அலுமினிய சுருள்களால் ஆனது. காந்த விசை நாடாக்கள், பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டு அதன் மீது காமா இரும்பு ஆக்சைடு பூசப்பட்டிருக்கும். இதில் அதிக தகவல்களை சேகரிக்கலாம். சேகரித்ததை அழித்துவிட்டு, மீண்டும் புதிய தகவல்களையும் பதிவு செய்யலாம்.

8.7 இயந்திரக் கட்டுப்பாட்டு அலகு (Machine Control Unit – MCU)

உள்ளீட்டு ஊடகங்கள் மூலம் பெறப்பட்ட ஆணை நிரல்களை செயல்களாக மாற்றிட உதவும் மின்னணு சுற்றுக்களை கொண்ட இயந்திரக்கருவியே "இயந்திரக் கட்டுப்பாட்டு அலகு" என அழைக்கப்படுகிறது. இவை மூன்று வகைப்படும்.

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 135 2/1/2023 1:32:58 PM

www.tnschoolbooks.in

அ) ஒருங்கிணைந்த வகை (Inbuilt type)

ஆ) சுழற்றி அமைக்க கூடிய வகை (Swivel Type)

இ) தனித்து நிற்கும் வகை (Stand Alone Type)

அ. ஒருங்கிணைந்த வகை

கட்டுப்பாட்டு அலகு, இயந்திரத்தின் கட்டமைப்பிலேயே இணைந்திருப்பின் அது "ஒருங்கிணைந்த வகை கட்டுப்பாட்டு அலகு" எனப்படும்.



ஒருங்கிணைந்த வகை

ஆ. சுழற்றி அமைக்க கூடிய வகை

கட்டுப்பாட்டு அலகு, சுழலும் அமைப்பின் மூலம் இயந்திரத்துடன் இணைக்கப்பட்டு பணியாளர் இருப்பிடத்தை பொறுத்து, சுழற்றி அமைத்து கொள்ளும் வகையில் இருப்பின் அது "சுழற்றி அமைக்கும் வகை கட்டுப்பாட்டு அலகு" எனப்படும்.



சுழற்றி அமைக்க கூடிய வகை

இ. தனித்து நிற்கும் வகை

கட்டுப்பாட்டு அலகு, இயந்திரத்திலிருந்து சற்று தொலைவில், தனியாக அமைக்கப்பட்டிருந்தால் அது 'தனித்து நிற்கும் கட்டுப்பாட்டு அலகு' எனப்படும்.



தனித்து நிற்கும் வகை

இயந்திரக்கட்டுப்பாட்டு அலகு கீழ்க்கண்ட கூறுகளை கொண்டதாகும்.

1. உள்ளீடு ஏற்கும் அலகு (Input Reading Unit)
2. நினைவக அலகு (Memory Unit)
3. செயல்படுத்தும் அலகு (Processing Unit)
4. வெளியீட்டு அலகு (Output Unit)
5. மீள்தரவு அலகு (Feedback Unit)

உள்ளீடு ஏற்கும் அலகு (Input Reading Unit)

உள்ளீட்டு ஊடகங்களில் உள்ள ஆணை நிரல்களை படிக்க உதவும் மின் காந்த அமைப்பினை 'உள்ளீடு ஏற்கும் அலகு' என்கிறோம். இவற்றின் பணிகளாவன.

1. உள்ளீட்டு ஊடகங்களை ஏற்றுக்கொள்ளுதல்
2. அவற்றிலுள்ள ஆணை நிரல்களை சேகரித்தல்
3. அவற்றை செயல் அலகிற்கு அனுப்பி வைத்தல்
4. உள்ளீட்டு ஊடகங்களை பத்திரப்படுத்துதல்.

நினைவக அலகு (Memory Unit)

உள்ளீடு ஏற்கும் அலகிலிருந்து பெறப்பட்ட தகவல்கள், நினைவக அலகில் சேமித்து வைக்கப்பட்டு, தேவைப்படும்போது செயல் அலகிற்கு அனுப்பி வைக்கப்படும்.

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 136 2/1/2023 1:32:58 PM


இயந்திரக் கருவி
உள்ளீட்டு ஊடகம்
துளையிடப்பட்ட அட்டை/ துளையிடப்பட்ட நாடா
உள்ளீடு ஏற்கும் அலகு
நினைவக அலகு
செய்முறைப்படுத்தும் அலகு
வெளியீட்டு அலகு
இயக்கும் கருவிகள்
மூலப்பொருள் பணிப்பொருளாக மாற்றப்படுதல்
இயந்திரக் கருவி
மீள்தரவு அலகு
நகர்வுகள் மின் துடிப்புகளாக மாற்றப்படுதல்
இயந்திரக் கட்டுப்பாட்டு அலகு

www.tnschoolbooks.in

செயல் அலகு (Processing Unit)

நினைவக அலகிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் செயல் அலகில் செயலாக்கம் (Process) பெற்று இயந்திரத்தின் பல்வேறு பாகங்களுக்கு அனுப்பப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. செயல் அலகானது, நினைவக அலகிற்கும், வெளியீட்டு அலகிற்கும் இணைப்பு பாலமாக விளங்குகிறது.

இங்கு தகவல்கள் செயலாக்கம் பெற "ஒருங்கிணைந்த சுற்றுக்கள்" (IC – Integrated Circuits) பயன்படுகிறது.

வெளியீட்டு அலகு (Output Unit)

செயல் அலகின் முகப்பில் உள்ள கடத்தி கம்பிகளின் முனைகளை வெளியீட்டு அலகு என்கிறோம். நினைவகத்தில் உள்ள, உள்ளீட்டு ஊடக ஆணை நிரல்கள், செயல் அலகில் செயல்படுத்தப்பட்டு (Process) மிகக் குறைந்த மின்னழுத்தம் கொண்ட மின் துடிப்புகளாக வெளியீட்டு அலகில் வெளிப்படுகின்றன. இந்த மின் துடிப்புகள் மின்னணு, மின் காந்த பெருக்கிகள் (Amplifiers) மூலம் பெருக்கம் செய்யப்பட்டு, இயந்திரத்தின் வெவ்வேறு இயக்கும் கருவிகளை (Drives & Slides) இயக்க உதவுகின்றன.

மீள்தரவு அலகு (Feedback Unit)

மீள்தரவு அலகு என்பது சில மின்னியல் மற்றும் மின்னணுவியல் மீள்தரவு கருவிகள் அடங்கிய வன்பொருள் (Hardware) ஆகும். இடப்பெயர்ச்சி (Displacement) மற்றும் திசை வேகம் (Velocity) போன்ற இயற்பியல் அளவுகளை மின் துடிப்புகளாக மாற்ற இவை உதவுகின்றன.

8.8 இயக்கும் கருவிகள் (Driving Devices)

இயந்திரக் கட்டுப்பாட்டு அலகினின்று பெறப்படும் கட்டளைகளைக் கொண்டு, இயந்திரங்களின் பல்வேறு நகற்றிகளை நுணுக்கமாக இயக்க பயன்படும் வெவ்வேறு வகையான மோட்டார்களையும், மற்றும் பல்லிணைத் தொடர்களையும் "இயக்கும் கருவிகள்" என அழைக்கிறோம்.

எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரத்தில் செர்வோ மோட்டார் (Servo Motor), ஸ்டெப்பர் மோட்டார் (Stepper Motor), சின்குரோஸ் (Synchros) மற்றும் ரிசால்வர் (Resolver) போன்ற இயக்கும் கருவிகள் பயன்படுகின்றன.

8.9 இயந்திரக்கருவி (Machine Tool)

மூலப்பொருளிலிருந்து, நமக்கு தேவையான வடிவத்தில், அளவில் உற்பத்தி பொருளை செய்ய உதவும் உபகரணமே இயந்திரக் கருவி எனப்படுகிறது. ஒரு இயந்திரக்கருவியைக் கொண்டு வெவ்வேறு விதமான பல பணிகளைச் செய்யலாம்.

இயந்திரக் கருவி

ஒரு இயந்திரக்கருவியில் 1) பணிமேடை 2) சுழற்றிகள் 3) வெட்டுளிகள் 4) ஜிக்ஸ் & பிக்சர்ஸ் எனப்படும் பணிப்பொருளை தாங்கும் உபகரணங்கள் 5) குளிரூட்டும் திரவ அமைப்பு 6) பிசிறுகளை வெளியேற்றும் அமைப்பு மற்றும் இதர துணைக்கருவிகள் ஆகியவை அடங்கும்.

8.10 CNC இயந்திரத்தின் வகைகள்:

1. CNC கடைசல் இயந்திரம்
2. CNC துளையிடம் இயந்திரம்
3. CNC அரைப்பு இயந்திரம்
4. CNC மில்லிங் இயந்திரம்
5. CNC லேசர் வெட்டும் இயந்திரம்
6. CNC பிளாஸ்மா வெட்டும் இயந்திரம்
7. CNC மின்சார வெளிப்பாட்டு இயந்திரம்
8. CNC வழிகாட்டி இயந்திரம்
9. CNC தானியங்கி இயந்திரம்
10. CNC 5 அச்சு இயந்திரம்

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 138 2/1/2023 1:32:58 PM

www.tnschoolbooks.in

CNC கடைசல் இயந்திரம்:

CNC கடைசல் இயந்திரம் என்பது ஒரு இயந்திரக்கருவி ஆகும். இதில் பணிப்பொருள் பொருத்தப்பட்டு முக்கிய சுழற்சியின் மூலம் சுழல வைக்கப்படுகிறது. நிலையாக பொருத்தப்பட்ட வெட்டுளி இரண்டு அச்சுகளின் வழியே பணிப்பொருளுக்கு ஏற்றவாறு நகரும்.

CNC கடைசல் இயந்திரத்தின் மூலம் உருளை வடிவ பணிப்பொருட்களின் வெளி மற்றும் உள் விட்டங்களை துல்லியமாக கடைசல் செய்யலாம்.

CNC துளையிடும் இயந்திரம்:

CNC துளையிடும் இயந்திரம் என்பது கொடுக்கப்பட்ட பணிப்பொருளில் கணினி மூலம் பெறப்பட்ட குறியீடுகளைக் கொண்ட கட்டளைகள் மூலம் சுழலும் வெட்டுளியான துளையிடும் அலகைக் கொண்டு துளையிடுகிறது.

இவ்வியந்திரம் CNC மென்பொருள் அனுப்பும் கட்டளைகளைக் கொண்டு இயங்குகிறது. இயந்திர பணியாளர் Computer Aided Design (CAD) அல்லது Computer Aided Manufacturing (CAM) என்ற கணினி கோப்பை (File) உள்ளீடு செய்து அதன்படி துளையிடுதல் செயலை செய்கிறார்.

CNC அரைப்பு இயந்திரம்

CNC அரைப்பு இயந்திரக்கருவி உலோகப் பணிப் பொருட்களில், சுழலும் அரைப்பு சக்கரத்தை பயன்படுத்தி அரைப்பு செய்கிறது பணிப்பொருளின் பரப்பின் தரம் மிகவும் நுணுக்கமாக இருக்க வேண்டிய இடங்களில் CNC அரைப்பு இயந்திரம் பயன்படுகிறது

CNC மில்லிங் இயந்திரம்:

CNC மில்லிங் இயந்திரமானது கணினி கட்டுப்பாட்டு ஆணைகளை நுணுக்கத்துடன் செயல்படுத்தி, பலமுனை கொண்ட மில்லிங் வெட்டுக்கருவியை சுழலவைத்து, மில்லிங் வேலை செய்கிறது. மில்லிங் வெட்டுக்கருவி X,Y மற்றும் Z ஆகிய முதன்மை அச்சுகள் வழியே நகர்ந்து ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட கணினி நிரலாக்கத்தின் படி செயல்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 139 2/1/2023 1:32:58 PM

CNC மில்லிங் இயந்திரமானது வளைவுகள் (profiles), குழிகள் (Cavities), பரப்பின் வெளிப்புற விளிம்புகள் (Surface Contours) வெட்டுதல், மாதிரி அச்சு வெட்டும் செயல் (Die cutting operation) போன்ற சிறப்பு வேலைகள் செய்ய பயன்படுகிறது.

8.11 பொதுவான இயந்திரங்களைக் காட்டிலும் கணினி எண்ணுரு கட்டுப்பாட்டு இயந்திரங்களின் நிறைகள் மற்றும் குறைகள்

CNC இயந்திரங்களின் நிறைகள்

1. தயாரிப்பு, திட்டமிடல் (Production. Planning) என்னும் பணி எளிமைப்படுத்தப்படுகிறது.
2. ஒரு கணினி எண்ணுருக்கட்டுப்பாட்டு இயந்திரத்தின் பணிகள் என்பது பல பொதுவான இயந்திரங்களின் மொத்த பணிகளுக்கு சமமாக உள்ளது. எனவே வேலை நேரம் குறைகிறது.
3. ஒரு CNC இயந்திரம் நிறுவப்படுவதால், பல பொதுவான இயந்திரங்களை நிறுவத் தேவைப்படும் தரைப்பரப்பின் (Floor Space) அளவு குறைகிறது.
4. உள்ளீட்டு ஊடகங்களை தயாரிக்க ஆகும் நேரம் பொதுவான இயந்திரங்களுக்கான ஜிக்ஸ் மற்றும் பிக்சர்களை தயாரிக்க ஆகும் நேரத்தை விட குறைவு.
5. தயாரிப்பு பணியின்போது, உற்பத்தி பொருளை குறைந்த எண்ணிக்கையில் கூட தயாரிக்க முடியும் என்பதால், மூலப்பொருள் கையிருப்பு குறைவாக இருந்தால் கூட போதுமானது.
6. உற்பத்தி பொருளின் வடிவமைப்பை (Design of a Component) தேவைப்படும்போது எளிதாகவும் விரைவாகவும் மாற்றிக் கொள்ளலாம்.
7. CNC இயந்திரத்தில் பணியாளர் பங்கேற்பு குறைவு என்பதால் இயந்திரத்தின் பயன்பாடு (Machine Utilization) அதிகரிக்கிறது.
8. CNC இயந்திரங்களில் ஜிக்ஸ் மற்றும் பிக்சர்கள் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே வெட்டுளி செலவு (Tooling Cost) குறைகிறது.
9. ஒரு குறிப்பிட்ட பணி நிலையிலேயே (Setup) பல இயந்திரப் பணிகள் செய்ய முடிவதால் நேரம் குறைகிறது.
10. இதில் மிக நுணுக்கமான இயந்திரப்பணி செய்ய முடிவதால், இணைத்துப் பூட்டுதல் எளிதாகிறது. செலவு குறைகிறது. பொருளின் தரம் உயருகிறது.
11. பணியாளர் மூலம் நிகழும் பிழைகள் குறைகிறது. எனவே வீணாதல் வெகுவாக குறைகிறது.
12. ஒரு பணியாளரே பல CNC இயந்திரங்களை மேற்பார்வை செய்ய இயலும் என்பதால், பணியாளருக்கான கூலி குறைகிறது.

CNC இயந்திரங்களின் குறைகள்

1. CNC இயந்திரத்தின் விலை அதிகம்
2. CNC இயந்திரத்தை இயக்குவதற்கு பயிற்சி பெற்ற அதிக திறமை வாய்ந்த இயந்திர பணியாளர் தேவைப்படுகிறார்கள்
3. CNC இயந்திரத்தின் பராமரிப்பு செலவு அதிகம்.

8.12 CNC இயந்திரத்திற்கும் சாதாரண இயந்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

வரிசை எண்	CNC இயந்திரம்	சாதாரண இயந்திரம்
1.	அதிக செயல்திறன் கொண்டது. குறைவான உழைப்பும், குறைவான செலவும் போதும்	குறைவான செயல்திறன் கொண்டது. அதிக உழைப்பும், அதிக செலவும் தேவை.
2.	பணிப்பொருளின் தரம் கணினி சார்ந்த மென்பொருள் மூலம் அமைகிறது	பணிப்பொருளின் தரம் இயந்திரப் பணியாளரின் திறமை, மற்றும் உழைப்பு சார்ந்து அமைகிறது.
3.	கணினி கட்டளைகள் மூலம் அதிக அளவில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் தரத்தை பராமரிப்பது எளிதாகிறது	அதிக அளவில் பொருட்களை உற்பத்தி செய்யும் பொழுது தரத்தை பராமரிப்பது கடினமாகிறது.
4.	தரமான பொருட்களை உற்பத்தி செய்ய குறைவான திறமையுள்ள இயந்திர பணியாளரே போதுமானது	தரமான பொருட்களை உற்பத்தி செய்ய அதிக திறமை உள்ள இயந்திர பணியாளர் தேவை
5.	ஒரு இயந்திரப் பணியாளரே பல இயந்திரங்களை ஒரே சமயத்தில் இயக்க முடியும்	ஒரு இயந்திரப் பணியாளர், பல இயந்திரங்களை ஒரே சமயத்தில் இயக்க முடியாது

8.13 எண்ணுருக் கட்டுப்பாட்டு இயந்திரத்திற்கான திட்ட செயல்பாடு (Programming for CNC Machines)

தயாரிக்கப்பட வேண்டிய பொருளின் வரைபடத்தை அடிப்படையாகக்கொண்டு அதைப்பற்றிய பல்வேறு விவரங்கள் குறிப்புகளாக தயாரிக்கப்படுகின்றன. பொருளின் அளவுகள், வடிவம், வெட்டும் வேகம், ஊட்டம், வெட்டும் ஆழம், பணிகள் செய்யப்பட வேண்டிய வரிசைமுறை, வெட்டுளி உலோகம், பணிப்பொருளின் உலோகம் மற்றும் இதர விவரங்கள் குறிப்புகளாக தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டு அலகிற்கு உள்ளீடு செய்யப்பட வேண்டும். குறிப்புகளை மேற்சொன்ன வகையில் தயாரிக்கும் பணியை 'திட்ட செயல்பாடு' என்கிறோம்.

பாகத்திற்கான திட்ட செயல்பாடு (Part Programme)

கணினி அல்லது கட்டுப்பாட்டு அலகிற்கு ஏற்ற முறையில், தயாரிக்கப்பட வேண்டிய பொருளினைப் பற்றிய விவரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட திட்டத்தினை 'பாகத்திற்கான இயக்க திட்டம்' என்கிறோம்.

இது கீழ்க்கண்ட இரண்டு முறைகளில் உருவாக்கப்படுகிறது.

1. சாதாரண திட்ட செயல்பாடு (Manual Assisted)
2. கணினி திட்ட செயல்பாடு (Computer Assisted)

APT (Automatically Programmed Tools), ADAPT, Ex APT, SPLIT, PROMP ஆகிய கணினி உயர்மட்ட மொழிகள் 'கணினி திட்ட செயல்பாடு' எழுத உதவுகிறது.

8.14 எண்ணுரு கட்டுப்பாட்டு இயந்திரங்களின் வளர்ச்சி

எண்ணுரு கட்டுப்பாட்டு இயந்திரங்கள், நுண்செயலிகளின் (Microprocessor) உதவி கொண்டு செயல்பட துவங்கிய பின்னர், இத்துறையின் தொழில் நுட்பம் பல மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அவற்றில் கீழ்கண்டவை குறிப்பிடத்தக்கவை.

1. நேரடி எண்ணுருக்கட்டுப்பாடு (DNC – Direct Numerical Control)
2. தகவேற்பு கட்டுப்பாடு (Adaptive Control)

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 141 2/1/2023 1:32:58 PM

www.tnschoolbooks.in

நேரடி எண்ணுருக்கட்டுப்பாடு (Direct Numerical Control)

தொலைவில் பொருத்தப்பட்டுள்ள ஒரு மெயின் ஃபிரேம் கணினியுடன், பல எண்ணுரு கட்டுப்பாட்டுக் கருவிகள் இணைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுமானால், அந்த அமைப்பு நேரடி எண்ணுரு கட்டுப்பாடு என்றழைக்கப்படுகிறது. இவ்வமைப்பின் முக்கிய பிரிவுகளாவன.

அ) மெயின் ஃபிரேம் கணினி

ஆ) மொத்த நினைவகம் (Bulk Memory)

இ) கணினி கட்டமைப்பு (Network System)

ஈ) எண்ணுருக்கட்டுப்பாட்டு இயந்திரங்கள் (NC Machines)



நேரடி எண்ணுரு கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம், ஒவ்வொரு இயந்திரத்திற்குமான தனித்தனி கட்டுப்பாட்டு அலகு, உள்ளீட்டு ஊடகங்கள் ஆகியவை தவிர்க்கப்படுகின்றன. இந்த அமைப்பு, இதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து எண்ணுருக்கட்டுப்பாட்டு இயந்திரங்களையும் அவற்றின் பணிகளையும் கவனித்து கொள்கிறது. இதற்காக பயன்படுத்தப்படும் கணினி கட்டமைப்பு என்பது உள்ளக வலை அமைப்பாகவோ (Local Area Network) அல்லது பெரும் பரப்பு வலையமைப்பாகவோ (Wide Area Network) இருக்கலாம்.

தகவேற்பு கட்டுப்பாடு (Adaptive Control)

இயந்திரப்பணி நடைபெறும் போதே வெட்டும் வேகம், ஊட்டம் மற்றும் வெட்டும் ஆழம் ஆகியவற்றின் அளவுகள், நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுடன் ஒப்பிடப்பட்டு பின்பு தகவமைக்கப்பட்டு (மாற்றி அமைக்கப்பட்டு) செய்யப்படுகின்றன. எனவே இவற்றை 'தகவேற்பு கட்டுப்பாடு' என அழைக்கிறோம்.

செயல்பாடுகள்

- மாணவர்களை அருகில் உள்ள பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரிகளுக்கு அழைத்துச் சென்று CNC இயந்திரங்களை காண்பித்து விளக்கிக் கூறுதல்.

வினாக்கள்

பகுதி – அ (1 மதிப்பெண்)

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தயாரிப்பு பணி என்பது __________ஆல் சாத்தியமாகிறது.

அ) மனிதன் மற்றும் இயந்திரத்தால்

ஆ) மூலப்பொருள் மற்றும் வெட்டுளிகளால்

இ) மனிதன், இயந்திரம், மூலப்பொருள் மற்றும் வெட்டுளிகளால்

ஈ) மனிதன் மற்றும் வெட்டுளிகளால்.

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 142 2/1/2023 1:32:58 PM

2. ஒரு என்.சி. அமைப்பில் இயக்கத்திட்ட குறிப்புகள் __________ ஆக கொடுக்கப்படுகின்றன.

அ) தகவல்கள்

ஆ) எண்ணுரு தரவுகள்

இ)குறியீடுகள்

ஈ) மறை குறியீடாக்கம்

3. IC என்பதன் விரிவாக்கம்

அ) Information Control

ஆ) Instruction Control

இ) Internal Control

ஈ) Integrated Circuits

பகுதி – ஆ (3 மதிப்பெண்)

ஓரிரு வரிகளில் விடையளி

4. எண்ணுருக்கட்டுப்பாடு – வரையறு.
5. இயந்திரக் கட்டுப்பாட்டு அலகின் வகைகள் யாவை?
6. இயந்திரக் கட்டுப்பாட்டு அலகின் கூறுகளில் எவையேனும் மூன்றினை எழுதுக?
7. உள்ளீடு ஏற்கும் அலகின் பணிகள் யாவை?
8. CNC இயந்திரத்தின் குறைகள் யாவை?

பகுதி – இ (5 மதிப்பெண்)

ஒரு பக்க அளவில் விடையளி

9. எண்ணுரு கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்பாடு பற்றிய ஒழுக்கு வரைபடம்(Flow Chart) வரைக
10. உள்ளீட்டு ஊடகம் பற்றி விவரி?
11. CNC இயந்திரத்தின் வகைகள் யாவை?
12. இயந்திரக் கட்டுப்பாட்டு அலகின் வகைகளில் ஏதேனும் ஒன்றினை படம் வரைந்து விளக்குக.

பகுதி – ஈ (10 மதிப்பெண்)

விரிவான விடையளி

13. CNC இயந்திர கருவியின் செயல்முறை பற்றிய ஒழுங்கு வரைபடம் (Flow Chart) வரைக?
14. CNC இயந்திரத்திற்கும் சாதாரண இயந்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

XII BME_Tamil version CHAPTER 08-2023.indd 143 2/1/2023 1:32:59 PM

www.tnschoolbooks.in

பாடம் 9

தானியங்கியியல் மற்றும் எந்திரனியல் (Automation and Robotics)

கற்றலின் நோக்கம்

- தானியங்கியியல்: மனிதனின் உதவியின்றி தானாக செயல்படும் இயந்திரங்கள். அவை செயல்படும் முறைகள், அதற்கான தானியங்கி தொழில் நுட்பங்கள், ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.
- எந்திரனியல்: மனிதன் செய்யக்கூடிய வேலைகளை, மனித நடவடிக்கைகளை போன்றே தொழில் நுட்ப உதவியை கொண்டு இயங்கும் மனித இயந்திரங்களை பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்.

பொருளடக்கம்

9.1 தானியங்கியியல்(Automation) – அறிமுகம்
9.2 வகைகள்
9.3 தேவைகள்
9.4 நன்மைகள் மற்றும் குறைபாடுகள்
9.5 பயன்பாடுகள்
9.6 எந்திரனியல் (Robotics) – அறிமுகம்
9.7 மனித இயந்திரம் வரையறை மற்றும் மனித இயந்திரத்தின் முக்கிய பாகங்கள்
9.8 மனித இயந்திரத்தின் நன்மைகள் மற்றும் குறைகள்
9.9 அசிமோவ் விதிகள்
9.10 மனித இயந்திரத்தின் தேவைகள்
9.11 மனித இயந்திரத்தின் வகைகள்
9.12 மனித இயந்திரம் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள்

9.1 அறிமுகம் தானியங்கியியல் (Introduction of Automation)

மனிதனின் உதவியின்றி ஒரு செயல்முறை அல்லது நடைமுறையை செய்ய பயன்படும் தொழில் நுட்பமே தானியங்கியியல் (Automation) எனப்படும்.

நாம் வீட்டில் பயன்படுத்தும் தண்ணீரை சூடேற்றும் சாதனம் (Heater) முதல், பெரிய தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு அமைப்பு வரை தானியங்கியியல் பயன்படுத்தப்படும்.

இயந்திரவியல் திரவவியல், மின்னியல், மின்னணுவியல் மற்றும் கணினி சாதனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இயங்கும் வகையில் தானியங்கி இயந்திரங்கள் வடிவமைக்கப்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 09-2023.indd 144 2/1/2023 1:35:06 PM

உங்களுக்குத் தெரியுமா?

தானியங்கியியலின் தந்தை என்றழைக்கப்படுபவர் நிகோலா டெஸ்லா (Nikola Tesla),

ஆண்டு : 1856–1943.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் கடிகாரங்கள் முதல் நவீன தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், விமானங்கள், கப்பல்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் போன்றவற்றில் தானியங்கி தொழில் நுட்பங்கள் (Automatic Mechanism) பயன்படுத்தப்படுகிறது.

'தானியங்கியியல்' என்பது ஆங்கிலத்தில் "Automation" என்றழைக்கப்படுகிறது. பண்டைய கிரேக்க சொற்களான 'ஆட்டோ' (பொருள்) மற்றும் மாடோஸ் (நகரும்) என்பதிலிருந்து "ஆட்டோமேஷன்" என்ற வார்த்தை பிறந்தது. இவ்வாறு ஒரு பொருள் தானாகவோ அல்லது சுய ஆணையை பெற்றோ செயல்படுமாயின் அதைப்பற்றிய அறிவியலுக்கு "தானியங்கியியல்" (Automation) எனப்படும்.

9.2 தானியங்கியியல் வகைகள் (Types of Automation)

தானியங்கியியல் இரண்டு வகைப்படும்.

1. கட்டுப்பாடு அடிப்படையில் இயங்கும் தானியங்கி (Based on Control)
2. பயன்பாடு அடிப்படையில் இயங்கும் தானியங்கி (Based on Application)

1. கட்டுப்பாடு அடிப்படையில் இயங்கும் தானியங்கி

அ) பகுதி தானியங்கி(Partial Automation):

மனிதன் மூலமாகவும், தானியங்கி மூலமாகவும் இணைந்து பொருளை இயங்க வைப்பது "பகுதி தானியங்கி" எனப்படும்.



பகுதி தானியங்கி

ஆ) முழுமையான தானியங்கி (Fully Automation)

மனித செயல்பாடு இல்லாமல் ஒரு பொருள் தானாகவோ அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப சுய ஆணை பெற்றோ இயங்குவதே முழுமையான தானியங்கி எனப்படும்.



முழுமையான தானியங்கி (Whole Automation)

2. பயன்பாடு அடிப்படையில் இயங்கும் தானியங்கி

அ) கட்டிட தானியங்கி முறை (Building Automation System)

வீடு, அலுவலகம் பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் சூடேற்றி (Heater) காற்றோட்டத்தை ஏற்படுத்தும் மின்விசிறி (Fan), குளிர்விக்கும் சாதனம் (Air–Conditioner) மற்றும் ஒளி அமைப்பு (Lighting) ஆகிய சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தும் முறைக்கு கட்டிட தானியங்கி முறை எனப்படும். இதற்கு மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு தானியங்கி (Centralized control automation) முறை பயன்படுத்தப்படுகிறது.

XII BME_Tamil version CHAPTER 09-2023.indd 145 2/1/2023 1:35:06 PM

கட்டிட தானியங்கி முறை

வகைகள்

1. தானியங்கி அலுவலகம்
2. தானியங்கி வீடு

ஆ) தொழிற்துறை தானியங்கி முறை (Industrial Automation System):

மனித உதவியின்றி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இயந்திரங்களின் செயல்முறைகளை கணினி சாதனங்களின் உதவியோடு தானியங்கி முறையில் செயல்படுத்தும்முறை ஆகும்.

சிறிய குண்டூசி முதல் பெரிய இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் வரை இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

